ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM | VARALARUU | PUDUGAIVARALARU | VARALARUU | 7502051351






## 4 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் வெளியாயின

# அமோகம்

## மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கரில் பாஜக ஆட்சி, காங்கிரஸ் வசமானது தெலங்கானா

புதுடெல்லி, டிச. 4-

2024 மக்களவைத் தேர்தலுக்கான செமி ஃபைனல்ஸ்.. இப்படியொரு அறிமுகத்தோடுதான் 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் திருவிழா களைகட்டத் தொடங்கியது. தேசமே எதிர்பார்த்த தேர்தல் முடிவுகள் வெளியாகி, அதில் 4-ல் 3 மாநிலங்களை பாஜகவின் வெற்றிக் களமாக்கிக் கொடுத்துள்ளது. மத்தியப் பிரதேசத்தில் பெரும்பான்மையுடன் ஆட்சியை தக்கவைத்துக் கொண்டது பாஜக. அத்துடன் சத்தீஸ்கர், ராஜஸ்தானை காங்கிரஸிடமிருந்து பாஜக பறித்துக் கொண்டுள்ளது. இழப்பென்று ஏதுமில்லை. காங்கிரஸ் வெற்றித் தடம் பதித்துள்ள தெலங்கானாவிலும் கடந்த தேர்தலை ஒப்பிடுகையில், சிறப்பாக ஏற்றம் கண்டுள்ளது பாஜக.



மத்தியப் பிரதேசத்தில் கடந்த 1993 மற்றும் 1998 தேர்தலில் காங்கிரஸின் திக்விஜய்சிங் தலைமையில் அடுத்தடுத்துவென்று ஆட்சி அமைத்ததற்கு பின்னர் காங்கிரஸிடமிருந்து மாநிலத்தை தட்டிப் பறித்த பாஜக 2003-ம் ஆண்டிலிருந்து தனது வேரை மத்தியப் பிரதேசத்தில் ஆழமாக ஊன்றியுள்ளது. அதற்கு பின்னர் நடந்த நான்கு சட்டப்பேரவைத்தேர்தலில் மூன்றில் பாஜக வெற்றி பெற்றிருந்தது. என்றாலும் நீண்ட கால ஆட்சி, கால மாற்றம் ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு இந்த முறை பாஜகவிடமிருந்து ஆட்சியைத் தட்டிப் பறிக்கும்எண்ணத்துடனும், அடுத்த ஆண்டு வர இருக்கும் மக்களவைத் தேர்தலை மனதில் கொண்டும் பெரும் நம்பிக்கையுடன் இந்தத் தேர்தலை காங்கிரஸ் சந்தித்தது. ஆனால், 167 தொகுதிகளில் முன்னிலை என இமாலய வெற்றியை சாத்தியமாக்கியுள்ளது பாஜக. ஆட்சிக்கு எந்த எதிர்ப்பலையும் இல்லை என்பதை பாஜக நிரூபித்துள்ளது என்று பெருமிதம் தெரிவித்துள்ளார் சிவ்ராஜ் சவுகான்.

சத்தீஸ்கர் மாநிலத்தில் ஆட்சி அமைக்க 46 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டிய தேவை. ஆளும் கட்சியான காங்கிரஸ் ஆட்சியை தக்கவைத்துக் கொள்ள வாய்ப்பு அதிகம் இருப்பதாக கருத்துக் கணிப்புகள் தெரிவித்தன. ஆனால், அவற்றைத் தவிடு பொடியாக்கியுள்ளது பாஜக. படுதோல்வியிலிருந்து மீண்டுள்ளது. 2003-ல் இருந்து தொடர்ந்து 3 முறை சத்தீஸ்கரில் ஆட்சி செய்தது பாஜக. 2018-ல் பாஜக படுதோல்வி அடைந்திருந்தது. அப்போது பாஜக ஆளும் கட்சி.வெறும்15இடங்களில் மட்டுமே வெற்றி பெற்ற பாஜக வலுவான எதிர்க்கட்சியாகக் கூட இருக்கத் தகுதியற்றுப் போயிருந்தது. இந்நிலையில், இந்தத் தேர்தலில் 50 பிளஸ் இடங்களை எளிதாக வசப்படுத்துகிறது பாஜக. சத்தீஸ்கரில் காங்கிரஸ் வெற்றியை உறுதியாக நம்பிய நிலையில் அமலாக்கத் துறை கையிலெடுத்த மகாதேவ் கேமிங் ஆப் ஊழல் மற்றும் மதுபான கொள்முதல் ஊழல், மாநிலத்தின் மாவோயிஸ்டுதாக்குதல்கள், மத மோதல்கள் எல்லாவற்றிற்கும் மேலாக உட்கட்சிப் பூசல் அதற்குப் பெரும் பின்னடைவைப் பெற்றுத் தந்துள்ளது.

ராஜஸ்தானில் பாஜக 115 தொகுதிகளை கைப்பற்றும் நிலையில் உள்ளது. அதேவேளையில், ஆளும் காங்கிரஸ் கட்சி 71 தொகுதிகளில் மட்டுமே வெற்றிமுகம் கண்டு இந்தத் தேர்தலில் பின்னடைவை சந்தித்துள்ளது.

ராஜஸ்தான் சட்டப்பேரவையில் நடந்த சில விஷயங்களைத் தொடர்ந்து 'ரெட் டைரி' அம்மாநில அரசியலில் பேசுபொருளாகியுள்ளது. மாநிலத்தில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு தவறிவிட்டது என்று சொந்தக் கட்சி, அரசுக்கு எதிராக கருத்துக் கூறியதைத் தொடர்ந்து காங்கிரஸ் எம்எல்ஏ ராஜேந்திர குடா அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து, தன்னால் முதல்வர் அசோக் கெலாடை அம்பலப்படுத்த முடியும் என்று கூறி கையில் ஒரு ரெட் டைரியுடன் (சிவப்பு நிற டைரி) சட்டப்பேரவைக்குள் நுழைய முயன்ற அவர், அங்கிருந்து வெளியேற்றப்பட்டார். இதனைவைத்துதான் பாஜக அதன் பிரச்சாரங்களை முன்னெடுத்தது. ரெட் டைரியில் எல்லாமே இருக்கிறது என்று பாஜகவினர் பட்டியலிட அது வாக்காளர்களை மாஸாகவளைத்துவிட்டது தேர்தல் முடிவில் அப்பட்டமாகத் தெரிகிறது.

தெலங்கானா மாநிலம் உருவாகக் காரணமாக இருந்த போராளி, மூத்த தலைவர் கே.சந்திரசேகர ராவ். ஆனால் அவர் இத்தேர்தலில் வீழ்த்தப்பட்டுள்ளார். தெலங்கானாவில் ஹாட்ரிக் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் காங்கிரஸிடம் படுதோல்வி அடைந்துள்ளது தெலங்கானா.காங்கிரஸின் வெற்றி கவனம் பெற்றிருந்தாலும், மாநில கட்சியை வீழ்த்தி தேசிய கட்சிகள் தடம் பதிப்பது பிராந்திய அரசியலுக்கு உகந்தது அல்ல என்ற விமர்சனங்களும் எழுந்துள்ளன. காங்கிரஸின் ராகுல், பாஜகவின் மோடி அமித் ஷாவின் பிரச்சாரங்கள் களை கட்டியது, உள்ளூர் கட்சியான ஒவைசி கட்சியைவிட பாஜக அதிக இடங்களில் முன்னிலை வகிப்பது ஆகியன தேசிய கட்சிகளின் ஆதிக்கம் மாநில அரசியலில் அதிகரிப்பதற்கான சான்று என்று கூறப்படுகிறது.

கேசிஆர் என்ற தெலங்கானாவின் அடையாளத்தை வீழ்த்த காங்கிரஸுக்கு பக்கபலமாக இருந்தவராக அறியப்படுகிறார் அம்மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் ரேவந்த் ரெட்டி. தெலங்கானாவில் காங்கிரஸின் வெற்றியைத் தொடர்ந்து அத்தனை ஊடக கவனமும் ரேவந்த் ரெட்டியை நோக்கித் திரும்பியுள்ளது. தோல்வியை சந்தித்த பிஆர்எஸ் கட்சியை சார்ந்தவரும் கேசிஆரின் மகளுமான கவிதா, "எக்ஸ் தளத்தில் ஆட்சியில் இருந்தாலும் இருந்தாவிட்டாலும் நாங்கள் தெலங்கானா மக்களின் சேவகர்கள். தாய்மண்ணுக்காக உற்சாகமாக உழைப்போம்" என்று நெகிழ்ச்சி பொங்க பதிவிட்டுள்ளார்.



▶ புதுக்கோட்டை ஆரோக்கிய மாதா மக்கள் மன்றத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின விழாவினை அமைச்சர்கள் ரகுபதி, மெய்யநாதன் ஆகியோர் நேற்று துவக்கி வைத்து பயனாளிகளுக்கு உதவி உபகரணங்களை வழங்கினார்கள். உடன் மாவட்ட கலெக்டர் மெர்சி ரம்யா, புதுக்கோட்டை எம்எல்ஏ முத்துராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயலட்சுமி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

## அமலாக்கத்துறை சார்பில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் மீது டிஜிபியிடம் புகார்

சென்னை, டிச. 4-

மதுரை அமலாக்கத்துறை மண்டல துணை அலுவலகத்திற்குள் புகுந்து லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸார் சோதனை நடத்தியதற்கு, உரிய நடவடிக்கை எடுக்க கோரி அமலாக்கத்துறை சார்பில் தமிழ்நாடு காவல்துறை இயக்குனரிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

மதுரை மண்டல துணை அமலாக்கத்துறை அலுவலகத்தில் அலுவலராக பணிபுரிந்து வந்த அங்கித் திவாரி என்பவர் திண்டுக்கல்லை சேர்ந்த மருத்துவர் சுரேஷ்பாபு மீது வழக்கு தொடுக்காமல் இருக்க 51 லட்சம் ரூபாய் லஞ்சம் வழங்க வேண்டும் என கேட்டுள்ளார். இதையடுத்து முதல் கட்டமாக 20 லட்சம் ரூபாயை சுரேஷ் பாபு அங்கித் திவாரியிடம் வழங்கியுள்ளார். ஆனால் அமலாக்கத்துறையில் விசாரித்தபோது அவர் மீதான வழக்கு முடிவுற்றதாக தெரியவந்தது. இதனால் தான் ஏமாற்றப்பட்டதை அறிந்த சுரேஷ்பாபு, மீண்டும் பணம் கேட்டு அங்கித் திவாரி மிரட்டியதால் லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸாரிடம் புகார் அளித்தார்.

புகாரின் பேரில் லஞ்ச ஒழிப்பு துறையினர் ரசாயனம் தடவிய நோட்டுகள் அடங்கிய 20 லட்சம் ரூபாயை அங்கித் திவாரியிடம் வழங்குமாறு சுரேஷ்பாபுவிற்கு அறிவுறுத்தினர். இதன் பேரில் லஞ்சத்தை பெற்ற அங்கித் திவாரியை கையும் களவுமாக பிடித்த லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸார் அவரை கைது செய்தனர்.



இதையடுத்து அதிரடியாக அவர் பணியாற்றி வந்த மதுரை மண்டல துணை அமலாக்கத்துறை அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை இரவு ஆய்வு மேற்கொண்டனர். அப்போது அமலாக்கத்துறை அதிகாரிகள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், போலீஸார் பாதுகாப்புடன் லஞ்ச ஒழிப்பு துறையினர் சோதனை மேற்கொண்டனர். இந்த விவகாரம் மிகுந்த பரபரப்புடன் இருந்து வரும் நிலையில் தற்போது லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸார் மீது நடவடிக்கை எடுக்குமாறு அமலாக்கத்துறை சார்பில் தமிழ்நாடு டிஜிபியிடம் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அமலாக்கத்துறை பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில், அரசு அலுவலகத்திற்குள் அத்துமீறி நுழைவது, அரசு ஊழியர்களை பணி செய்ய விடாமல் தடுத்தல் ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவம் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## செல்லப் பிராணிகள் வளர்ப்போர் கவனம் : வளர்ப்பு பூனையால் ரேபிஸ் தொற்றியதில் தந்தை, மகன் பரிதாப பலி

கான்பூரில் : டிச. 4, உத்தரபிரதேச மாநிலம், கான்பூரில் ரேபிஸ் நோயால் தந்தை-மகன் இருவரும் உயிரிழந்துள்ளனர். அவர்கள் செல்லமாக வளர்த்த பூனையை கடந்த சில தினங்களுக்கு முன்பு தெரு நாய் கடித்ததில், அதற்கு ரேபிஸ் நோய் இருப்பது கண்டறியப்பட்ட நிலையில், தந்தை மகன் உயிரிழந்துள்ளனர்.

உத்தரபிரதேசம் கான்பூர் தேஹாட்டின் அக்பர்பூர் நகரை சேர்ந்தவர் தேஜாஸ் இவரது மகன் அங்கத் இவர்கள் அங்குள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வருகின்றனர். இவர்கள் தங்களது வீட்டில் ஒரு பூனையை செல்லமாக வளர்த்து வந்துள்ளனர்.





குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பூனையுடன் விளையாடுவதும் அதற்கு உணவளிப்பதும் வாடிக்கையாக வைத்துள்ளனர். இந்த நிலையில் தெருநாய் ஒன்று பூனையை கடித்ததால் அடுத்த சில நாட்களில் வெறிநாய்க்கடியின் அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துள்ளது.

இதனை குடும்பத்தினர் யாரு கண்டுக்கொள்ளவில்லை என தெரிகிறது. இந்த நிலையில் பூனையுடன் அங்கத் விளையாடிக் கொண்டிருந்தபோது, பூனை கீறியுள்ளது. இந்த நிலையில் அங்கத்தின் உடல் நிலை படிப்படியாக மோசமடையத் தொடங்கியுள்ளது.

பூனையின் அறிகுறிகள் அங்கத்திடம் தோன்றத் தொடங்கிய நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு அவர் உயிரிழந்துள்ளார். இந்த நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அவரது தந்தையும் உயிரிழந்துள்ளார். அவருக்கும் ரேபிஸ் நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. ரேபிஸ் நோயால் தந்தை மகன் உயிரிழந்துள்ள சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## சென்னை விமானநிலையத்தில் மிக்ஜம் புயலை எதிர்கொள்ள தயார் நிலையில் சிறப்புக்குழு

மீனம்பாக்கம் : டிச. 4, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று முதல் 2 நாட்களில் தாக்கக்கூடிய மிக்ஜம் புயலை எதிர்கொள்வது குறித்து நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு காணொலி காட்சி மூலமாக விமான நிலைய இயக்குநர் தலைமையில் அவசர ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து புயலை எதிர்கொள்ள முழு பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்வதற்கு 100க்கும் மேற்பட்ட அதிகாரிகள், ஊழியர்களை கொண்ட சிறப்பு குழு அமைக்கப்பட்டது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று முதல் 2 நாட்களில் மிக்ஜாம் புயல் தாக்கலாம் என்று சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதைத் தொடர்ந்து, சென்னை விமானநிலையத்தில் மிக்ஜம் புயல் எதிர்கொள்வது குறித்து, சென்னை விமானநிலைய இயக்குநர் சி.வி.தீபக் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு காணொலி காட்சி மூலம் அவசர ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில், சென்னை விமானநிலைய உயர் அதிகாரிகள், இந்திய வானிலை ஆராய்ச்சி மைய அதிகாரிகள், அனைத்து ஏர்லைன்ஸ் நிறுவன அதிகாரிகள், மத்திய தொழில் பாதுகாப்பு படை அதிகாரிகள், விமான பாதுகாப்பு துறை அதிகாரிகள், சென்னை மாநகர காவல்துறை அதிகாரிகள் உள்பட பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மிக்ஜம் புயல் கரையைக் கடக்கும் வரை, சென்னை விமான நிலையத்தில் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட அதிகாரிகள், ஊழியர்கள் கொண்ட ஒரு சிறப்பு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவினர், மிக்ஜம் புயல் கரையைக் கடந்து, சகஜநிலை ஏற்படும் வரையில் தொடர்ந்து, தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபடுகின்றனர். மேலும், சென்னை விமான நிலையத்தில் ஓடுபாதை பகுதியில் இருந்து மழைநீர் வெளியேறும் கால்வாயைத் தொடர்ந்து கண்காணித்து, அங்கு மழைநீர் தேங்காதபடி வெளியேற்றிக் கொண்டே இருக்க வேண்டும். அதற்கான பணிகளுக்கு கூடுதல் ஊழியர்களைப் பணியில் அமர்த்துவதோடு, கால்வாயில் அடைப்பு ஏதாவது ஏற்பட்டால் அதை சரிசெய்வதற்கு தேவையான உபகரணங்களும் ஊழியர்களுக்கு வழங்கப்படுகிறது.




சென்னையை மிக்ஜம் புயல் தாக்கும்போது, விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள விமானங்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்காக, தங்களுடைய விமானங்களை புயல் துவங்கும் சில மணி நேரத்துக்கு முன்னதாகவே, சென்னை அருகே பெங்களூர், ஐதராபாத், திருச்சி, கோவை, மதுரை போன்ற விமான நிலையங்களுக்கு கொண்டு சென்று நிறுத்த அந்தந்த ஏர்லைன்ஸ் நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

மேலும், சென்னை விமான நிலையத்தில் புயல் பாதிப்பு இருக்கும் நேரங்களில் விமானங்கள் மட்டுமின்றி, விமான நிலையத்துக்குள் ஓடக்கூடிய பிக்-அப் வாகனங்கள், பயணிகளை அழைத்து செல்லும் வாகனங்கள், விமானத்தில் பயணிகளை இறக்க பயன்படும் ஏணிகள் உள்பட எந்தவொரு வாகனமும் விமானநிலைய ஓடுபாதையில் இயக்குவதற்கு அனுமதி கிடையாது. அதேபோல், மிக்ஜம் புயல் முழுமையாக கடக்கும்வரை, சென்னை விமானநிலையத்தில் எந்தவொரு விமானமும் இயக்கப்பட மாட்டாது.

அந்நேரங்களில் சென்னை விமானநிலையத்தில் தங்கியிருக்கும் பயணிகள், விமானநிலைய ஊழியர்கள், ஏர்லைன்ஸ் நிறுவன ஊழியர்கள் உள்பட சென்னை விமானநிலையத்தை சார்ந்துள்ள அனைத்து ஊழியர்களுக்கும் தேவையான உணவு, குடிநீர் வசதிகளை முன்னதாகவே செய்து கொள்ள அறிவுறுத்தப்பட்டு உள்ளது. மேலும், பயணிகள் தங்குவதற்கு கூடுதல் இடவசதி ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன. சென்னை விமான நிலையத்தில் புயல் நேரத்தின்போது மின்தடை ஏற்பட்டால், அவற்றை சமாளிக்க தேவையான ஜெனரேட்டர்கள், இன்வெர்ட்டர்கள் போன்றவற்றை தயார்நிலையில் வைத்திருக்க அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், சென்னை விமானநிலையத்தின் பின்பகுதியில் ஓடும் அடையாறு ஆற்றின் நீர்மட்டத்தை தொடர்ந்து கண்காணிக்க ஒரு தனி சிறப்பு குழு அமைக்கப்பட்டு உள்ளது. தற்போது அடையாறு ஆறு முழுமையாக தூர்வாரி ஆழப்படுத்தி கரைகளும் பலப்படுத்தப்பட்டு உள்ளன. இதனால் சென்னை விமானநிலையம் அருகே ஓடும் அடையாறு ஆறு வழியாக வெளியேறும் செம்பரம்பாக்கம் ஏரியின் உபரிநீரால் பாதிப்பு ஏற்படாது என்று சென்னை விமானநிலைய அதிகாரிகளால் கூறப்படுகிறது. எனினும், அடையாறு ஆற்று நீரோட்டம் மிகத் தீவிரமாக கண்காணிக்கப்படும்.

இதுதவிர, மிக்ஜம் புயல் தாக்குவதாக கருதப்படும் இன்று மற்றும் நாளை ஆகிய 2 நாட்களில் சம்பந்தப்பட்ட ஏர்லைன்ஸ் நிறுவன அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, விமான சேவைகளின் இயக்கத்தை உறுதிப்படுத்திய பிறகு பயணிகள் சென்னை விமான நிலையத்துக்கு வந்தால் போதும். அவர்கள் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாகவே விமான நிலையத்துக்கு வந்தால், குறிப்பிட்ட நேரத்தில் விமானங்கள் தாமதமின்றி புறப்பட்டு செல்ல வசதியாக இருக்கும் என அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

மேலும், இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அறிக்கைகள் பெறப்பட்டு, அவை அனைத்து ஏர்லைன்ஸ் நிறுவனங்களுக்கும் உடனடியாக அனுப்பி வைக்கப்படும். அதற்கேற்ப தங்களுடைய விமானங்களின், இயக்கங்கள் பற்றி சம்பந்தப்பட்ட ஏர்லைன்ஸ் நிறுவனம் முடிவு செய்துகொள்ள வேண்டும் என்று அவசர ஆலோசனை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. மேலும், புயல் கரையைக் கடக்கும்வரை, இதுபோன்ற அவசர ஆலோசனை கூட்டங்கள் நடத்தி, விமானநிலையத்தில் முழுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளை தீவிரப்படுத்துவது, புயல் கரையை கடக்கும்வரை அனைத்து ஊழியர்களும் விடுப்பு இல்லாமல் பணிக்கு வரவேண்டும் என அனைத்து துறையினரும் அறிவுறுத்தப்பட்டு உள்ளனர் என்று சென்னை விமானநிலைய அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

"நீங்கள் புத்திசாலியான மனிதராக இருந்தால், இயல்பாகவே நீங்கள் அன்பாகவும் இணைத்துக்கொள்ளும் தன்மையுடனும் இருப்பீர்கள்."




# மிக்ஜாம் புயலில் தடையற்ற மின்சாரம் அமைச்சர் தங்கம் தென்னரசு உறுதி




சென்னை : டிச. 4, மிக்ஜாம் புயல் காரணமாக மின் தடை ஏற்படாத வகையில் தேவையான தளவாட பொருட்கள் தயார் நிலையில் இருப்பதாக தமிழ்நாடு மின்சாரத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி அருகே துரைநல்லூர் துணை மின் நிலையத்தில் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேற்கொண்டுள்ள பணிகள் குறித்து மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு செய்தார்.

மின்துறை மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, கும்மிடிப்பூண்டி எம்எல்ஏ டி.ஜெ. கோவிந்தராசன் ஆகியோருடன் அமைச்சர் தங்கம் தென்னரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். அப்போது, மின் தடை ஏற்படாதவாறு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், புயல் மற்றும் கனமழை காரணமாக மின் வினியோகம் பாதிக்காத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தி இருந்ததன் பேரில் தொடர் ஆய்வு மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார். திருவள்ளூர் மாவட்டத்தில் கனமழை, புயல் காரணமாக கடலோர பகுதிகளில் பாதிப்பு ஏற்படாத வகையில் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக கூறினார். மின்தடை ஏற்படாத வகையில் தேவையான தளவாட பொருட்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் 3,650 மின்கம்பங்கள், 450 கிமீ மின்கம்பிகள், 40 மின்மாற்றிகள், 1500 களப்பணியாளர்கள் தயார் நிலையில் உள்ளதாக தெரிவித்தார்.

மருத்துவமனைகளுக்கும், குடிநீர் வினியோகம் பாதிக்காத வகையில் மின்சாரம் வழங்கிட முன்னுரிமை அளித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் அப்போது தெரிவித்தார். பொதுமக்கள், மின் ஊழியர்கள் என உயிரிழப்பு ஏற்படாமல் இருக்க அனைத்து பாதுகாப்பு நெறிமுறைகளும் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

# மீனவர்கள் கவலை : 12 அடிக்கு மேல் எழும்பும் அலைகள் – ரூ.50 லட்சம் மதிப்பிலான சேதங்கள்



நாகை : டிச. 4, வங்கக்கடலில் உருவாகியுள்ள மிக்ஜாம் புயல் காரணமாக நாகை கடற்கரையோர பகுதிகளில் கடல் அலைகள் கடும் சீற்றத்துடன் காணப்படுகின்றன. அலைகளில் சிக்கி 50 லட்சம் ரூபாய் மதிப்பிலான படகு ஒன்று கவிழ்ந்ததால் மீனவர்கள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

வங்கக்கடலில் உருவாகியுள்ள மிக்ஜாம் புயல் காரணமாக கடற்கரையோர பகுதிகளில் கடல் கடும் சீற்றத்துடன் காணப்படுகிறது. நாகை கடலோர பகுதிகளில் சுமார் 12 அடி உயரத்திற்கு அலைகள் எழும்பி வருவதால், கடற்கரையோரத்தில் வசிக்கும் மக்கள் அச்சத்தில் ஆழ்ந்துள்ளனர். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, கடலூர், நாகை, திருவாரூர், புதுக்கோட்டை, உள்ளிட்ட மாவட்டங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் கடல் கடும் சீற்றத்துடன் காணப்படுகிறது.

இந்த மாவட்டங்களில் பல இடங்களில் இடைவிடாமல் மழை பெய்து வருவதால், ஆறுகள் மற்றும் நீர்நிலைகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இந்த நிலையில் நாகை மாவட்டம் கடுவையாற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக துறைமுகத்தில் கட்டப்பட்டிருந்த படகு ஒன்று கயிறு அறுந்து கடலில் விழுந்து கவிழ்ந்தது. அக்கரைப்பேட்டையை சேர்ந்த பிரகாஷ் என்பவருக்கு சொந்தமான இந்த விசைப்படகை மீட்க மீனவர்கள் முயற்சித்த போதும், கடல் கடும் சீற்றத்துடன் காணப்படுவதால் அந்த முயற்சி கைகூடவில்லை.

இதனால் மீன்பிடி வலைகள், எஞ்சின் உட்பட சுமார் 50 லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் விசைப்படகுடன் துறைமுக பாறையில் மோதி கடும் சேதம் அடைந்தது. இதனால் மீனவர்கள் பெரும் கவலையில் ஆழ்ந்துள்ளனர். கடல் தொடர்ந்து கடும் கொந்தளிப்புடன் காணப்படுவதால், கடற்கரைக்கு செல்வதை தவிர்க்குமாறு அதிகாரிகள் அறிவுறுத்தி வருகின்றனர்.




# சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து




சென்னை : டிச. 4–

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் நேற்று கொண்டாடப்பட்ட நிலையில், பல்வேறு தலைவர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

இந்த நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது சமூக வலைதள பக்கத்தில் கூறி இருப்பதாவது; "தன்னம்பிக்கையும் உழைப்பும் கொண்டு சமூகத்தில் சுடர்விட்டு ஒளிரும் மாற்றுத்திறனாளித் தோழர்கள் அனைவருக்கும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின வாழ்த்துகள். சமூகச் சமத்துவமும் சுயமரியாதையும் போற்றி, உங்களது வாழ்வு உயர நம் கலைஞர் வழியில் உங்கள் திராவிட மாடல் அரசு தொடர்ந்து பாடுபடும் என்று அவர் கூறியுள்ளார்.

# துபாயில் வேலை என கூறி திருப்பூர் இளம் பெண்களுக்கு பாலியல் தொல்லை – 17 வயது சிறுமி உட்பட 4 பேர் கைது




திருப்பூர் : டிச. 4, திருப்பூரை சேர்ந்த 17 வயது சிறுமி, துபாய் நாட்டில் மதுபான விடுதியில் டான்ஸராக வேலை செய்து விட்டு, சமீபத்தில் திருப்பூர் திரும்பியுள்ளார்.

இந்நிலையில், சிறுமி தன்னுடன் பள்ளியில் படித்த தோழிகளான 19 வயது இளம் பெண்களை அணுகியுள்ளார். அப்போது, அந்த சிறுமி துபாயில் அழகுக்கலை நிபுணர் வேலை செய்ததாகவும், நல்ல சம்பளம் கிடைத்ததாகவும், அங்கு வேலையில் சேர்த்துவிடுவதாகவும் ஆசை வார்த்தை கூறியுள்ளார். இதை நம்பிய 2 இளம் பெண்கள், தங்களின் பெற்றோரிடம் கூறி சம்மதம் பெற்றனர்.

இதையடுத்து, திருப்பூரை சேர்ந்த சிறுமி மற்றும் நடனக் கலைஞர்களாக உள்ள அவரது நண்பர்களான சென்னை போரூர் நிதின் (22), காட்டுப் பாக்கம் மோகன் (22), பெங்களூருவை சேர்ந்த திலிப் (23) உட்பட 4 பேரும் சேர்ந்து, 2 இளம் பெண்களை கடந்த மாதம் 20-ம் தேதி துபாய் அனுப்பி வைத்தனர். இதற்காக இருவரிடமும் பாஸ்போர்ட், விசா உள்ளிட்ட செலவுகளுக்காக ரூ.1 லட்சம் பெற்றுள்ளனர். இந்நிலையில், திருப்பூர் சிறுமி கூறியபடி வேலை இல்லாமல், மதுபான விடுதியில் நடனமாட அழைத்துச் சென்றுள்ளனர். அந்த மதுபான விடுதிக்கு வரும் ஆண்களிடம் நெருக்கமாக பழகும்படி, பாலியல் ரீதியாக தொந்தரவு கொடுத்துள்ளனர்.

இதையடுத்து பெற்றோரிடம் இளம்பெண்கள் அலைபேசியில் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக திருப்பூர் வடக்கு போலீஸாரிடம் பெற்றோர் அளித்த புகாரின் பேரில், துபாயில் இருந்து 2 இளம் பெண்களை திருப்பூருக்கு போலீஸார் மீட்டு வந்தனர். இது தொடர்பாக வடக்கு போலீஸார் வழக்கு பதிந்து திலீப், மோகன், நிதின் மற்றும் 17 வயது சிறுமி ஆகிய 4 பேரை கைது செய்தனர்.

# மெரினா கடற்கரை மூடல் : ஒலிபெருக்கி மூலம் எச்சரிக்கும் போலீஸார்



சென்னை, டிச. 4–

மிக்ஜாம் புயல் காரணமாக கடல் கொந்தளிப்புடன் காணப்படுவதால் மெரினா கடற்கரை செல்லும் சாலையில் தடுப்புகள் அமைத்து போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

வங்கக்கடலில் உருவாகியுள்ள மிக்ஜாம் புயல் இன்று கரையை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் இடைவிடாமல் கன மழை பெய்து வருகிறது. மேலும் பலத்த சூறைக்காற்றும் வீசி வருகிறது. புயல் காரணமாக வங்கக்கடல் கடும் கொந்தளிப்புடன் காணப்படுகிறது.

இதனால் பொதுமக்களின் பாதுகாப்பு கருதி சென்னை மெரினா கடற்கரைக்கு செல்லும் அனைத்து சாலைகளிலும் தடுப்புகள் அமைத்து போலீஸார் பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் பட்டினப்பாக்கம், திருவான்மியூர் உள்ளிட்ட கடற்கரைகளுக்கு செல்லும் சாலைகளையும் அடைத்துள்ள போலீஸார் பொதுமக்கள் யாரும் கடற்கரைக்கு வர வேண்டாம் என எச்சரித்து வருகின்றனர்.

இது தொடர்பாக ஒலிபெருக்கிகள் மூலம் அவர்கள் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர். கனமழை காரணமாக மாநகரின் பல்வேறு பகுதிகளிலும் மழை நீர் தேங்குவதற்கான அபாயம் இருப்பதால், அதனை அகற்றும் பணியில் மாநகராட்சி ஊழியர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். மேலும் அனைத்து துறை அலுவலர்கள் தயார் நிலையில் இருக்குமாறு தமிழ்நாடு அரசு அறிவுறுத்தியுள்ளது.

# கோவை கார் குண்டு வெடிப்பு வழக்கு தொடர்பாக 2 பேரிடம் என்.ஐ.ஏ அதிகாரிகள் விசாரணை



கோவை : டிச. 4, கோவை கார் குண்டு வெடிப்பு வழக்கு தொடர்பாக இதுவரை 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கோவை உக்கடம் கோட்டை ஈஸ்வரன் கோவில் முன்பு கடந்த ஆண்டு அக்டோபர் 23-ந் தேதி கார் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது.

இந்த குண்டு வெடிப்பிற்கு மூளையாக செயல்பட்ட அதே பகுதியை சேர்ந்த ஜமேஷா முபின் இதில் பலியானார். இந்த குண்டு வெடிப்பு சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் நடத்திய விசாரணையில் ஜமேஷா முபின், தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து கோவையில் பயங்கர நாச வேலைக்கு திட்டமிட்டது தெரியவந்தது.

இந்த வழக்கில் தொடர்புடையதாக முகமது தல்கா, முகமது அசாருதீன், முகமது ரியாஸ், பெரோஸ் இஸ்மாயில், முகமது நவாஸ் இஸ்மாயில், அப்சர்கான் உள்ளிட்ட 13 பேரை போலீசார் கைது செய்தனர். தற்போது இந்த வழக்கை என்.ஐ.ஏ. அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். இந்த நிலையில், கோவை கார் குண்டு வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள முகமது இத்ரீஸ், தாஹா நசீர் ஆகிய 2 பேரை தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் காவலில் எடுத்து விசாரணை நடத்தி வருகின்றனர். இருவரையும் சென்னை புழல் சிறையில் இருந்து கோவை முகாம் அலுவலகத்திற்கு அழைத்து சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# கூடலூரில் யானை தாக்கியதில் ஒருவர் பலி



கூடலூர் : டிச. 4–

கூடலூர் அருகே காட்டில் விறகு பொறுக்க சென்ற ஒருவர் காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நீலகிரி மாவட்டம் கூடலூர் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில நாட்களாக காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுகிறது. கடந்த ஓராண்டில் மட்டும் இதே பகுதியில் யானைகள் தாக்கியதில் 5-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து, வனத்துறை சார்பில் கும்கி யானைகள் உதவியுடன் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் யானைகள் நடமாட்டம் உள்ள பகுதியில் வனத்துறையினரும் தொடர் ரோந்து பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நாடுகாணி அடுத்த பொன்னூர் பகுதியைச் சேர்ந்த ராமமூர்த்தி (50) என்பவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை விறகு பொறுக்குவதற்காக தேவாலா வனப்பகுதிக்கு சென்றுள்ளார். ஆனால் நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பாததால் சந்தேகமடைந்த உறவினர்கள், இது குறித்து வனத்துறையினருக்கு தகவல் அளித்தனர். தகவலின் பேரில் வனப்பகுதியில் ரோந்து சென்ற வனத்துறையினர், அங்கு ராமமூர்த்தி சடலமாக கிடப்பதை கண்டறிந்தனர்.

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், காட்டு யானை தாக்கியதில் ராமமூர்த்தி உயிரிழந்திருப்பது தெரியவந்தது. இதையடுத்து அவரது உடலை மீட்ட வனத்துறையினர், போலீஸார் உதவியுடன் பிரேதபரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

இதனிடையே யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம், தேவாலா பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. வனத்துறையினர் விழிப்புடன் கூடுதல் கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதே சமயம், வனப்பகுதிக்குள் செல்வதை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும் என வனத்துறையினரும் அறிவுறுத்தி வருகின்றனர்.

# புதுக்கோட்டையில் நடைபெற்ற பயிர் மருத்துவ முகாமை புதுடெல்லி கேபி அலுவலர் பார்வையிட்டார்



புதுக்கோட்டை , டிச. 4–

எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் ஏற்பாடு செய்த பயிர் மருத்துவ முகாம் புதுக்கோட்டை அருகே திருமலைராய சமுத்திரத்தில் நடைபெற்றது. நிகழ்விற்கு எம்.எஸ்.சுவாமிநாதன் நகராட்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி ஆர்.ராஜ்குமார் தலைமை வகித்தார்.

ஊராட்சிமன்ற தலைவர் ராணி பெரியசாமி முன்னிலை வகித்தார். புதுடெல்லி, விவசாயம் மற்றும் உயிரியல் பராமரிப்பு மைய, கேபி, விஞ்ஞானி கிருத்திகா கண்ணன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

அவர் தனது உரையில் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் தமிழ்நாடு, புதுச்சேரி, அஸ்ஸாம், ஒடிஷா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் பயிர் மருத்துவ முகாமை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது. பயிர் மருத்துவ முகாம் பயிர்களில் ஏற்படும் பூச்சி, நோய் மற்றும் நுண்ணூட்ட சத்து குறைபாடுகளை புதிய அறிவியல் தொழில்நுட்ப கருவிகள் உதவியுடன் துல்லியமாக கண்டறிந்து, எளிதில் கிடைக்கக்கூடிய, சிலவு குறைவான, சூழலுக்கு பாதிப்பு இல்லாத பரிந்துரைகளை வழங்குவதால் விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது.

இந்தபயிர் மருத்துவமுகாம் எவ்வாறு விவசாயிகளுக்கு பயனுள்ளதாக உள்ளது என்பதை விவசாயிகளிடம் கேட்கறிந்து இன்னும் சிறப்பாக செயல்படுத்த என்னென்ன வழிமுறைகளை கையாள வேண்டும் என்பதை தெரிந்து கொள்வதற்காக நான் வந்துள்ளேன். விவசாயிகள் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத மேலாண்மை முறைகளை பயிர் மருத்துவர் இடமிருந்து பெற்று, இடு பொருள்கள் சிலவைக் குறைத்து, மகசூலை பெருக்கி அதிக வருமானம் பெற பயிர் மருத்துவ முகாம்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

பின்னர் பயிர் மருத்துவ முகாம், மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் தயாரிக்கப்படும் இயற்கை இடுபொருட்கள் உற்பத்தி மையம் மற்றும் விவசாயிகள் தோட்டங்களை பார்வையிட்டார். மேலும் பயிர் மருத்துவ முகாம் விவசாயிகளுக்கு எவ்வாறு பயனுள்ளதாக உள்ளது என்பதை கலந்துரையாடல் மூலம் கேட்டறிந்தார். எம். எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன பயிர் மருத்துவர், பாரதிதாசன் விவசாயிகள் கொண்டு வந்த பாதிக்கப்பட்ட பயிர் மாதிரிகளை ஆய்வு செய்து உரிய பரிந்துரைகளை வழங்கினார். விவசாயிகள் முத்துலட்சுமி, விமலா, கலா, ராதா, ஜெகநாதன் உள்ளிட்ட விவசாயிகள் பயிர் மருத்துவ முகாம் எவ்வாறு தங்களுக்கு பயனுள்ளதாக என்பதை பகிர்ந்து கொண்டார்கள்.

கள அலுவலர் விமலா, தொழில் நுட்ப அலுவலர் வினோத் கண்ணா நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர்.

# அரியலூர் செந்துறையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டபயனாளிகள் பதிவு செய்யும் சிறப்பு முகாம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா நேரில் பார்வை



அரியலூர்,டிச.4–

அரியலூர் நகராட்சி அலுவலகம் மற்றும் செந்துறை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் நடைபெற்ற, முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் புதிய பயனாளிகளைச் சேர்ப்பதற்கான சிறப்பு காப்பீட்டு திட்ட பதிவு முகாமினை, மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வில் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா கலந்துகொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர், ஏழை, எளிய மக்களுக்கு நவீன மற்றும் மேம்படுத்தப்பட்ட மருத்துவ வசதிகள் கிடைத்திடும் வகையில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் அரியலூர் நகராட்சி அலுவலகம் மற்றும் செந்துறை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் புதிய பயனாளிகளைச் சேர்ப்பதற்கான சிறப்பு காப்பீட்டு திட்ட பதிவு முகாமினை பார்வையிட்டு, இடவசதி, மின்சார வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் முறையாக ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்தும், மனுக்கள் உரிய ஆவணங்களுடன் இணைக்கப்பட்டு பெறப்படுகிறதா என்பதும் குறித்தும் கேட்டறிந்து ஆய்வு செய்ததுடன், பொதுமக்களிடமிருந்து காலதாமதமின்றி மனுக்களை பெற்று விரைவாக பதிவு செய்திட வேண்டும் எனவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில் இணை இயக்குநர் (குடும்பநலம்) மரு.இளவரசன், வருவாய் கோட்டாட்சியர்கள் ராமகிருஷ்ணன் (அரியலூர்), பரிமளம் (உடையார்பாளையம்), வட்டாட்சியர் (அரியலூர்) ஆனந்தவேல், வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபாகரன், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

4 மாநில தேர்தல் வெற்றி காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலகம் எதிரே

# பாஜக அலுவலகத்தில் வெடி வெடித்து பொதுமக்கள் இனிப்பு வழங்கி கொண்டாட்டம்



காஞ்சிபுரம் நவ 4.

தெலுங்கானா, சத்தீஸ்கர், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் மிசோரம் மாநில சட்டசபைகளுக்கு நவம்பர் 7-ந் தேதி முதல் நவம்பர் 30-ந் தேதி வரை பல்வேறு கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன. மிசோரம் மாநில சட்டசபை தேர்தல் வாக்கு எண்ணிக்கை நேற்று நடைபெற்றன.

சத்தீஸ்கர், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களில் பாஜக அமோக வெற்றியை தொடர்ந்து தெலுங்கானாவில் காங்கிரஸ் முன்னிலை பெற்றன.

பாஜக வெற்றியை நோக்கி முன்னிலையில் உள்ளதால் காஞ்சிபுரம் மாவட்ட பாஜகவினர் மாநகராட்சி அலுவலகம் எதிரே உள்ள அலுவலகத்தில் முன்பு மாவட்ட தலைவர் கே எஸ் பாபு தலைமையில் சாலையில் வெடி வெடித்து கொண்டாடி சாலையில் செல்லும் வாகன ஓட்டிகளுக்கும் பொதுமக்களுக்கும் இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொது செயலாளர் வாசன் மாவட்டத் துணைத் தலைவர் ஜம்போடை சங்கர் மாநகர மேற்கு மண்டல தலைவர் காஞ்சி ஜீவாநந்தம் செயலாளர் கோடீஸ்வரன் பொருளாளர் யுவராஜ் துணைத்தலைவர் கேசவன் தாமரை ஆறுமுகம் செயலாளர் மோகன் பாஜகவினர் ரவி, கணேஷ், மோகன் ஆகியோர் உடன் இருந்தனர்.

# சிறுவாபுரியில் தனியார் பிளைவுட் நிறுவனத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பல லட்சம் மதிப்பிலான பொருட்கள் தீயிக்கு இரையானது





ஊத்துக்கோட்டை, டிச4-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,ஆரணி அருகே உள்ள சிறுவாபுரி கிராமம்,அம்பேத்கர் நகரில் தனியாருக்கு சொந்தமான ப்ளைவுட் தயாரிக்கும் நிறுவனம் ஒன்று இயங்கி வருகிறது.

இந்த நிறுவனத்தில் பணியாற்றும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்கு நேற்று விடுமுறை அளிக்கப்பட்டது. இதனால் அனைவரும் வெள்ளிக்கிழமை இரவு வீட்டுக்கு சென்று காவலாளி மட்டுமே இந்நிறுவனத்தில் இருந்தார். இந்நிலையில், நேற்று விடியற்காலை இந்த தனியார் நிறுவனத்தின் உள்ளே இருந்து கரும்புகை வந்ததை கண்டு காவலாளி அதிர்ச்சி அடைந்தார்.

சிறிது நேரத்தில் தீமளமளவென பற்றி எரிந்து. அப்பொழுது அப்பகுதியில் பலத்த காற்று வீசியதால் தீ மேலும் கொழுந்துவிட்டு எரிந்தது.தகவல் அறிந்த ஆரணி காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் வெங்கடேசன் தலைமையில் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர்.

மேலும்,கும்மிடிப்பூண்டி,தேர்வாய், பொன்னேரி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தீயணைப்பு மற்றும் மீட்பு படையினர் விரைந்து வந்து தண்ணீரை பீச்சி அடித்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். பிளைவுட் என்பதால் தீயை கட்டுக்குள் கொண்டு வருவதற்கு மிகவும் சிரமமாக இருந்ததாம். இத்தீ விபத்து இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.மின் கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டு இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

புயல் மழையால் குடிநீர் வினியோகம், மருத்துவமனைக்கு

# தடையில்லா மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சார வாரியத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்



ஊத்துக்கோட்டை,டிச4-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், வடக்குநல்லூர் ஊராட்சியை சேர்ந்த துரைநல்லூர் கிராமத்தில் துணை மின் நிலையம் உள்ளது,இங்கு புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேற்கொண்டுள்ள பணிகள் குறித்து மின்சார வாரியதுறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியின்போது மின்சார வாரியத்துறையின் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராசன் ஆகியோர் உடன் இருந்தனர்.

இந்த ஆய்வின்போது அமைச்சர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் தங்கம் தென்னரசு புயல் மற்றும் கனமழை காரணமாக மின் வினியோகம் பாதிக்காத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தி இருந்தார்.

எனவே,இந்த ஆய்வு மேற்கொண்டதாக கூறினார். திருவள்ளூர் மாவட்டத்தில் கனமழை,புயல் காரணமாக கடலோர பகுதிகளில் பாதிப்பு ஏற்படாத வகையில் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

மின்தடை ஏற்படாத வகையில் தேவையான தளவாட பொருட்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் 3,650 மின்கம்பங்கள்,450 கிமீ மின்கம்பிகள்,40 மின்மாற்றிகள்,1,500 களப்பணியாளர்கள் தயார் நிலையில் உள்ளதாக கூறினார். மருத்துவமனைகளுக்கும், குடிநீர் வினியோகம் உள்ளிட்டவை பாதிக்காத வகையில் மின்சாரம் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் கூறினார். மேலும், பொதுமக்கள்,மின் ஊழியர்கள்,கால்நடைகள் என எந்த வகையிலும் உயிரிழப்பு ஏற்படாமல் இருக்க அனைத்து வகையில் பாதுகாப்பு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்.

# சீர்காழி அருகே ஓட்டு வீடு இடிந்து விழுந்து மூன்று பேர் படுகாயம்: அரசு மருத்துவமனையில் சிகிச்சை





சீர்காழி ,டிச4-

தமிழகத்தில் காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக கடந்த ஒரு வார காலமாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே பெருந்தோட்டம் கிராமத்தை சேர்ந்த ஜமீல்ராஜ் 50 என்பவரின் ஓட்டு வீடு மழையில் நனைந்து வீடு முழுவதும் மழை நீரில் ஊறி பாதிப்படைந்துள்ளது.

இந்த நிலையில் நேற்று வீட்டில் வழக்கம் போல ஜமீல்ராஜ் அவரது மனைவி கமலாதேவி மற்றும் மகள் சுபஸ்ரீ ஆகியோர் வீட்டில் இருந்தனர். அப்போது திடீரென ஓட்டு வீடு இடிந்து உள்ளே விழுந்துள்ளது.இதில் வீட்டிலிருந்த மூன்று பேரும் படுகாயம் அடைந்தனர். சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் ஓடி வந்து வீட்டில் சிக்கி இருந்தவர்களை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர்.

இதுகுறித்துதிருவெண்காடு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.





▶ வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், வேலூர் மாநகராட்சி மக்கான் கன்சால்பேட்டை பகுதியில் உள்ள ஆஞ்சநேயர் கோயில் தெருவில் தேங்கியுள்ள மழை நீரை அகற்றுவது குறித்து நேரடியாக சென்று ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது மாநகராட்சி ஆணையாளர் ஜானகி ரவீந்திரன், வேலூர் வருவாய் கோட்டாட்சியர் கவிதா, வட்டாட்சியர் செந்தில் உட்பட பலர் உடன் இருந்தனர்.



▶ காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட தனியார் திருமண மண்டபத்தில் தேசிய பேரிடர் மீட்பு படையினரை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி சந்தித்து ஆலோசனை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன் இ.ஆ.ப., உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம். பி.எழிலரசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் எம். மகாலட்சுமி யுவராஜ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.எம்.சுதாகர், மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சா.செல்வகுமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.க.சங்கீதா இ.ஆ.ப., காஞ்சிபுரம் ஒன்றிய குழுத்தலைவர் மலர்க்கொடி குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.




▶ ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று இந்தியா முழுவதும் நடைபெறும் நவோதயா பள்ளியின் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி காரைக்கால் மாவட்ட நவோதயா வித்யாலயா பள்ளியில் நேற்று நடைபெற்றது. நவோதயா பள்ளி சேர்மன் மற்றும் காரைக்கால் மாவட்ட ஆட்சியருமான குலோத்துங்கன் நிகழ்வில் கலந்து கொண்டு தலைமை ஏற்று விழாவினை துவக்கி வைத்தார். . மேலும் பரிசுகள் ஆட்சியர் தலைமையில் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை 1989 முதல் 96 ஆம் ஆண்டு வரை பயின்ற முன்னாள் மாணவர்கள் சிறப்பாக செய்திருந்தனர். இந்நிகழ்ச்சியில் நவோதயா பள்ளியின் முதல்வர் நந்தகுமார் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் முன்னாள் மாணவர்கள் முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் தலைவர் சார்லஸ் மற்றும் விழா ஏற்பாட்டினை செய்த சதீஷ் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.



▶ தேசிய பேரிடர் மீட்பு படையின் கமெண்டர் ரமேஷ் சந்த் குமாவத் தலைமையில், கிருஷ்ணன் ஆகியோர் தலைமையிலான (NDRF TEAM) 21 பேர் கொண்ட குழு நேற்று முன் தினம் இரவு காரைக்கால் வருகை தந்துள்ளார்கள். மழை மற்றும் புயல் சம்பந்தமாக நேற்று காலை 11.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் சந்தித்து ஆலோசனையில் ஈடுபட்டார். ஆட்சியர் கூறுகையில் காரைக்காலில் தாழ்வான இடங்களை பார்வையிடுமாறும் மேலும் கடலோரப் பகுதிகளை கண்காணிக்குமாறும் மேலும் தயார் நிலையில் இருக்குமாறும் ஆட்சியர் கேட்டுக் கொண்டார். காரைக்கால் மாவட்ட பேரிடர் மேலாண்மை மூலம் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு குழு மூலம் பாதிப்புகள் குறித்து உடனுக்குடன் தகவல்கள் பரிமாற படும் எனவும் தெரிவித்தனர். இந்நிகழ்வில் துணை ஆட்சியர் ஜான்சன் வட்டாட்சியர் செல்லமுத்து ஆகியோர் உடனிருந்தனர்.

# குமராட்சி அருகே பாலம் பிரச்சனை பேச்சுவார்த்தையில் சுமூக தீர்வு



காட்டுமன்னார்கோவில், டிச.04

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் அருகே குமராட்சி அருகே தேசிய நெடுஞ்சாலையில் பாலம் கட்டும் பிரச்னைக்கு, அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் சுமூக தீர்வு ஏற்பட்டது.சிதம்பரம் திருச்சி தேசிய நெடுஞ்சாலை பணிகள் நடந்து வரு கிறது.

இதில், குமராட்சி அருகே கீழவன்னியூர் கிராமத்தில் மேம்பாலம் தாழ்வாக அமைப்பதாக கூறப்படுகிறது. இதனால், சுற்றியுள்ள 15 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் அதன் பொருட்களை வாகனங்களில் எடுத்து செல்ல முடியாமல் பாதிக்கப்படுவார்கள் என, எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

குமராட்சி அருகே தேசிய நெடுஞ்சாலையில் பாலம் உயர்த்தி அமைப்பது தொடர்பாக, தாசில்தார் தமிழ்செல்வன் தலைமையில் நடந்த பேச்சுவார்த்தையில் வழியாக சுமூக தீர்வு காணப்பட்டு, தீர்மான கடிதம் அளிக்கப்பட்டது.

மேலும்,பாலத்தை உயர்த்தி அமைக்க கோரி, கடந்த வாரம், கிராம மக்கள் நூற்றுக்கும் மேற் பட்டோர் திரண்டு, பாலம் பணியை தடுத்து நிறுத்தினர். இந்நிலையில், இப்பிரச்னை தொடர்பாக, காட்டுமன்னார்கோவில் தாசில்தார் அலுவலகத்தில் பேச்சுவார்த்தை நடத்தப் பட்டது. தாசில்தார் தமிழ்செல் வன் தலைமை தாங்கினார்.

சேத்தியாத்தோப்பு டி.எஸ்.பி., ரூபன்குமார் தேசிய நெடுஞ்சாலை துறை மேலாளர் முருகன், குமராட்சி இன்ஸ்பெக்டர் அமுதா, விடுதலை சிறுத்தை கட்சி., மாவட்ட செயலாளர் மணவாளன்,குமராட்சி ஊராட்சி தலைவர் தமிழ்வாணன் மற்றும் இளையசிங்கம் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

கூட்டத்தில், பாலம் உயர்த்தி அமைக்க கோரும் மக்களின் கோரிக்கையை நெடுஞ்சாலைத் துறை மேலாளர் முருகன் ஏற்றுக்கொண்டு, நிறை வேற்றி தருவதாக உறுதி அளித்தார். இதனால் இப் பிரச்னைக்கு தீர்வு காணப்பட்டது.

# வாலாஜா ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்கிய பீடத்தில் நாட்டிய மஹோத்ஸவம். ஒரே நேரத்தில் 1000 பேர் பரதநாட்டியம்





ராணிப்பேட்டை. டிச.04.

கலாம் உலக சாதனைக்காக வாலாஜா ஸ்ரீ தன் வந்திரி ஆரோக்கிய பீடத்தில் ஒரே நேரத்தில் 1000 பேர் பரத நாட்டியம் ஆடினர்.

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டை அடுத்துள்ள கீழ் புதுப்பேட்டையில் அனந்தலை மதுரா என்னும் இடத்தில் ஸ்ரீ ஆரோக்கிய லக்ஷ்மி சமேத தன்வந்திரி ஆரோக்கிய பீடம் அமைந்துள்ளது. இதன் ஸ்தாபகர் பீடாதிபதி யக்ஞஸ்ரீ கயிலை ஞானகுரு டாக்டர். ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகளின் 63 வது ஜெயந்தி விழாவை முன்னிட்டு ஆயிரம் பரதநாட்டிய கலைஞர்கள் பங்கேற்கும் நாட்டிய மஹோஸ்தவம் நடைபெற்றது.

டிசம்பர் மாதம் 3ஆம் தேதி காலை முதல் மாலை வரை நடைபெற்ற இந்த நிகழ்ச்சியை அலமேலு பாஸ்கரன் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். இதைத்தொடர்ந்து பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த பரதநாட்டிய மாணவ மாணவிகள் ஒரே நேரத்தில் பரதநாட்டியம் ஆடி சாதனை புரிந்தனர். கலாம் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெறும் முயற்சியாக நடைபெற்ற இந்த ஆயிரம் பேர் ஒன்று சேர்ந்து ஆடிய பரதநாட்டிய நிகழ்ச்சியில் திருவலம் - பூர்ண வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவிகள் கலந்து கொண்டு பரதநாட்டியம் ஆடினர். எல்.கே.ஜி முதல், 8 ஆம் வகுப்பு வரை 70க்கும் மேற்பட்ட மாணவிகள் இதில் கலந்து கொண்டனர்.

பள்ளியின் தாளாளர் வேல்முருகன் அறிவுறுத்தலின்படி, ரம்யா. ஜெயஸ்ரீ, தனசேகரன், மெர்லின், ஜெனிபர், நித்யா, காயத்ரி, அனுசுயா, தமிழ்ச்செல்வன், உமா சாமுண்டி, மற்றும் ஜாய்ஸ் ரீமா உள்ளிட்ட ஆசிரிய, ஆசிரியைகள் நடன மாணவிகளை , சாதனை நிகழ்ச்சிக்கு பாதுகாப்பாக அழைத்து சென்று வந்தனர். இதற்கு பள்ளி நிர்வாகம் சார்பில் அவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. சிறு குழந்தைகள் முதற்கொண்டு பரதநாட்டிய மாணவிகள் அனைவரும் ஒரே நேரத்தில் ஒரே பாவத்தில் கை, கால்களை அசைத்து நடனமாடிய காட்சி காண்போரை பரவசத்தில் ஆழ்த்தியது.

இதை தொடர்ந்து மகோத்ஸவத்தையொட்டி வாலாஜா தன் வந்திரி பீடத்தில் , டிசம்பர் 14ம் தேதி 1008 சுமங்கலி பூஜையும், 15ம் தேதி சகஸ்ர கலச திருமஞ்சனமும், 16ம் தேதி நலத்திட்ட உதவிகளும் 17ம் தேதி ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகளின் 63வது ஜெயந்தி விழாவும் நடைபெறுகிறது. அதனை தொடர்ந்து டிச. 18 ஆம் தேதி திருஷ்டி துர்கா ஹோமத்துடன் மஹோத்ஸவம் நிறைவடைகிறது. - மு. இராம்குமார்.

# திருவெண்காடு கோவிலில் துர்கா ஸ்டாலின் பால்குடம் எடுத்து சிறப்பு வழிபாடு



சீர்காழி ,டிச4-

திருவெண்காடு சுவேதாரண்யேஸ்வரர் கோவிலில் அகோர மூர்த்தி விழாவினை முன்னிட்டு தமிழக முதல்வர் ஸ்டாலின் மனைவி துர்கா பால்குடம் எடுத்து வழிபாடு நடத்தினார்.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுக்கா திருவெண்காடு கிராமத்தில் தேவார பாடல் பெற்ற பிரம்ம வித்யாம்பிகை சமேத சுவேதாரண்யேஸ்வரர் சுவாமி கோவில் அமைந்துள்ளது.

இக்கோவில் நவகிரகங்களில் புதன் ஸ்தலமாகவிளங்கிவருகிறது. இங்கு சிவபெருமானின் அம்சமான அகோரமூர்த்தி தனி சன்னதியில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறார்.

அகோர மூர்த்திக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சிறப்பு வழிபாடு நடைபெறுவது வழக்கம்.இதில்கார்த்திகை மாதம் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை சிறப்பு வாய்ந்தது. இத்திருநாளில் பக்தர்கள் பால்குடம் எடுத்து வந்து அகோர மூர்த்திக்கு சிறப்பு அபிஷேகம் செய்து வழிபாடு நடத்துவது வழக்கம்.

இத்தகையசிறப்புமிக்க அகோர மூர்த்தி திருநாளான நேற்று மாலை கோவிலுக்கு வந்த தமிழக முதல்வர் ஸ்டாலின் மனைவி துர்கா ஸ்டாலின் சூரிய தீர்த்தத்தில் இருந்து பால்குடம் எடுத்து கோவிலை வளம் வந்து அகோர மூர்த்திக்கு அபிஷேகம்செய்வித்தார்.

தொடர்ந்து துர்கா ஸ்டாலின் சுவாமி அம்பாள் மற்றும் புதன் பகவான் சன்னதிகளுக்கு சென்று வழிபாடு நடத்தினார். பூஜைகளை பாபு குருக்கள் தலைமையிலானோர் செய்து வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில்துர்கா ஸ்டாலின் உறவினர்கள் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் மோகனசுந்தரம், செயல் அலுவலர் முருகன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். துர்கா ஸ்டாலின் வருகையை முன்னிட்டு ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். இதனை அடுத்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் சூரிய தீர்த்தத்தில் இருந்து பால்குடம் எடுத்து வந்து அகோர மூர்த்திக்கு அபிஷேகம் செய்தனர்.

# அறந்தாங்கி வட்டாட்சியர் அலுவலகத்தில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் கொண்டாட்டம்

அறந்தாங்கி,டிச.4–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி வட்டாட்சியர் அலுவலகத்தில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் தாசில்தார் ஜபருல்லா தலைமையில் மாற்றுத்திறனாளி தோழர்களை கவுரவிக்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.



இந்த நிகழ்வில் கலந்து கொண்ட மாற்றுத்திறனாளிகளுக்கு அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய பரிசுப்பெட்டகம் வட்டாட்சியர் ஜபருல்லாவால் வழங்கப்பட்டது, நிகழ்ச்சியில் மண்டல துணை வட்டாட்சியர் பாலமுருகன் தலைமை இடத்து துணை வட்டாட்சியர் இளஞ்சேரன் குறுவட்ட நிலஅளவர்கள் கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கிராம உதவியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு ஆவுடையார்கோவிலில் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது

அறந்தாங்கி,நவ.4–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே ஆவுடையார்கோவிலில் அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது



இந்த அரசு மருத்துவமனையில் உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை கொண்டாடும் வகையில்சமூக ஆர்வலர் தென்றல் நீலகண்டன் ஏற்பாட்டில்மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிகிச்சை பெற்று வரும் மாற்றுத்திறனாளிகளுக்கும் புற நோயாளிகளுக்கும் குளிர்காலத்தை கருத்தில் கொண்டு அரிசி பெட்ஷீட் தலையணை போர்வை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் நலத்திட்ட உதவிகளாக நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு வழங்கப்பட்டது

இந்த நிகழ்ச்சியில் அரசு மருத்துவர் பிரவினாவழக்கறிஞர் அலாவுதீன், மெடிக்கல் பழனியப்பன், CPIராமன் திருவாக்குடி ஊராட்சி மன்றத் தலைவர் கலா கருப்பையா எம்எஸ்கே பழனி, அம்மா கன்சல்டன்சி சிரஞ்சீவி மற்றும் ஆவுடையார்கோவில் அரசு மருத்துவமனை செவிலியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# வனத்துறையால் சிறை பிடிக்கப்பட்ட கடையநல்லூர் யானையை மீட்டுத் தரக்கோரி அனைத்து கட்சி சார்பில் வேண்டுகோள்

தென்காசி,டிச.4–

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் மக்தூம் ஞானியார் தர்ஹாவில் ஜெய்னி என்ற யானை உள்ளது இந்த பள்ளிவாசலின் 5 வது யானையான ஜெய்னிக்கு சான்றிதழ் மற்றும் காப்பீடு காலாவதியான காரணத்தால் கடந்த சில நாட்களுக்கு முன் வனத்துறையினர் பள்ளிவாசலில் இருந்து அந்த யானை திருச்சி யானைகள் மறுவாழ்வு முகாமிற்கு கொண்டு சென்றனர்



இந்த நிலையில் கடையநல்லூர் நகரத்தில் உள்ள அனைத்து கட்சியை சேர்ந்த முகமது அலி, எஸ் எம் மஸ்தான், கே என் சித்திக், அன்னக்கிளி அபுதாஹீர், முகமது ரபீக், எஸ்ஆர்எஸ் ரமேஷ், புரவிசங்கர், செல்வகுமார், எஸ்ஆர்எஸ் சுரேஷ், ஜெயமாலன் ஆகியோர் கூட்டாக அளித்த பேட்டியில் யானை சான்றிதழ் மற்றும் காப்பீடு பெறுவதற்கான அனைத்து வேலைகளும் நடைபெற்று வருகிறது இந்த யானை இந்த பகுதி மட்டுமில்லாமல் அனைத்து பகுதிகளிலும் உள்ள அனைத்து சமுதாய நிகழ்ச்சிகளுக்கும் சென்று வரக்கூடியது இந்த பள்ளிவாசலுக்கு மறுபெயரே யானை பள்ளி வாசல் என்று பெயர் உண்டு இந்த ஊரில் உள்ள அனைத்து சமுதாய மக்களின் குழந்தைகளுக்கு ஒரு பொழுதுபோக்கு அம்சமாக உள்ளது.

பொதுமக்கள் நலன்கருதி இந்த யானையை தமிழக முதல்வர் ஸ்டாலின் வனத்துறை அமைச்சர் மதிவேந்தன் சிறுபான்மை நலப்பிரிவு ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ் மற்றும் வனத்துறை அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர் மேலும் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் செ கிருஷ்ணமுரளி எ குட்டியப்பா திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் செல்லத்துரை ஆகியோர் இந்த யானையை மீட்டெடுக்க உறுதுணையாக இருப்பதாக பள்ளிவாசல் கமிட்டியினரிடம் தெரிவித்துள்ளனர் என்று தெரிவித்தனர் பேட்டியின் போது இத்தாலியன் பீரப்பா மீரான் சுலைமான் யானை பாகன் பாதுஷா மற்றும் ஊர் பொதுமக்கள் அனைத்து கட்சி நிர்வாகிகள் அனைத்து சமுதாய மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்டம் புளியங்குடியில் திமுக மருத்துவர் அணி சார்பில் மாபெரும் மருத்துவ முகாம்

தென்காசி,டிச.4–

தென்காசி மாவட்டம்-புளியங்குடியில் திமுக மருத்துவரணி சார்பில் வேல் கேர், சிவகிரி அத்ரித் மருத்துவமனை ராஜபாளையம் இணைந்து நடத்தும் மாபெரும் இலவச முகாமை தென்காசி வடக்கு மாவட்டச்செயலாளரும் சங்கரன்கோவில் எம்எல்ஏ ராஜாவும் ஆ. மணிகண்டன் மருத்துவர் வேல் கேர் மருத்துவமனை மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் தலைமையிலும் இலவச மருத்துவ முகாம் தொடங்கி வைக்கப்பட்டது.



முன்னிலை மருத்துவர் வே. சுமதி மாவட்ட மருத்துவஅணி தலைவி, பேச்சியம்மாள் மாவட்ட மருத்துவர் அணி துணைத் தலைவர், எம். நாகலட்சுமி மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர், எம். .எஸ்.முத்துக்குமார் துணை அமைப்பாளர், வரவேற்புரை எம். குருராஜ் துணை அமைப்பாளர், வாழ்த்துரை தனுஷ் எம். குமார் தென்காசி எம்பி, சிறப்பு அழைப்பாளர்களாக சதன் திருமலை குமார் வாசு,மருத்துவர் எஸ். எஸ். செண்பக விநாயகம் மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர், யூ எஸ் டி சீனிவாசன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள், எஸ் பரமகுரு, கோ.பத்மநாபன் மாவட்ட அவைத்தலைவர், வே.மனோகரன் மாவட்ட துணைச் செயலாளர்கள், ஜோ. ராஜதுரை , முத்தையா பாண்டியன் வாசு ஒன்றிய பெருந்தலைவர், கோ. பூசை பாண்டியன்ஒன்றியசெயலாளர், ஆ . அந்தோணிசாமி புளியங்குடி நகர செயலாளர், விஜயா சௌந்தரபாண்டியன் புளியங்குடி நகர் மன்றத் தலைவி, வேலுச்சாமி பாண்டியன் பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ் எம் சாகுல் ஹமீது, மருத்துவர் எம். ஜோதி விசுவநாதப்பேரி ஊராட்சி மன்ற தலைவி, மருத்துவ முகாமில் கலந்து கொண்ட மருத்துவர்கள்ஆ. மணிகண்டன், வே. சுமதி, எம். செல்வ மாரி, கே. செல்வ சரவணன், வே. சைலேஷ், எ. சத்தியபாலன், பி. ராமகிருஷ்ணன், பேச்சியம்மாள், சு.செ. சூர்யா,. சுசித்ரா என்ற ஆர்த்தி, சூர்யா, நகரத் துணைச் செயலாளர் காந்திமதி அம்மாள், மகளிர் அணி துணை அமைப்பாளர் பொன்னு துரைச்சி, நகர் மன்ற உறுப்பினர்கள் கவிதா, தங்கம், ஸ்டீபன் ராஜேஸ்வரி, மணிமாறன் பொருளாளர் காஜாமைதீன், டீக்கடை காஜாமைதீன், முருகேசன் ஆசிரியர், முருகேஷ், பரமசிவம், சேக் மைதீன், ஜெகநாத பெருமாள், சேதுராமன், விக்ரம மணிகண்டன், பெரியதுரை, ஆகியோர் கலந்து கொண்டு வைரஸ் காய்ச்சல் பொது மருத்துவம் சர்க்கரை வியாதி , இருதய நோய்கள், நரம்பியல் பக்கவாத நோய்கள் எலும்பு மூட்டு வலி மற்றும் தண்டுவட நோய்கள் பொதுநல அறுவை சிகிச்சைக்கான ஆலோசனைகள் மகளிர் நல ஆலோசனைகள், பிசியோதெரபி சிகிச்சைகள், அனைத்து விதமான சிறப்பு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இதில் பொதுமக்கள் ஆண்கள், பெண்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் அனைவரையும் வரவேற்று நன்றியுரை ஆற்றினார் தி. சுரேஷ் மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் கலந்து கொண்ட அனைவருக்கும் மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

# மக்கள் நீதி மய்யம் சார்பாக மாபெரும் இரத்ததான முகாம்



அருப்புக்கோட்டை, டிச.4–

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை பெரிய புளியம்பட்டி ஆயிரம் கண் மாரியம்மன் கோயில் மண்டபத்தில் மக்கள் நீதி மய்யம் சார்பாக அக்கட்சியின் தலைவர் கமல் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் இரத்ததான முகாம் நடைபெற்றது.இந்த இரத்ததான முகாமை வழக்கறிஞர் பாஸ்கரன் துவக்கி வைத்தார். மாவட்ட பொறுப்பாளர்கள் செல்வகுமார் மற்றும் சரவணகுமார் தலைமையிலும், மத்திய மாவட்ட பொறுப்பாளர் நாகராஜன் மற்றும் நகரச்செயலாளர் ராஜாமணி முன்னிலையிலும் நடைபெற்றது. உடன் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை அண்ணாதுரை மற்றும் அக்கட்சியின் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# உதகை அருகே பெண்ணின் எலும்புக்கூடு மீட்பு ஆய்வுக்கு அனுப்பி போலீஸார் விசாரணை

உதகை : டிச. 4,

உதகையை அடுத்த உல்லத்தி பகுதியிலுள்ள தனியார் தோட்டத்தின் புதர் பகுதியில் எலும்புக் கூடும், அதன் அருகே துணிகள் கிழிந்த நிலையிலும், மது பாட்டில்களும் இருந்துள்ளன.



இதை பார்த்து பொதுமக்கள் அளித்த தகவலின் பேரில் புதுமந்து காவல் நிலைய ஆய்வாளர் அல்லிராணி தலைமையிலான போலீஸார் சென்று, எலும்புக் கூட்டை மீட்டு ஆய்வுக்காக அனுப்பிவைத்துள்ளனர். அந்த எலும்புக் கூடு சுமார் 40 வயது மதிக்கத்தக்க பெண்ணின் உடல் அமைப்புடன் ஒத்து போகிறது. இது தொடர்பாக பல்வேறு கோணங்களில் போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

இது குறித்து போலீஸார் கூறும் போது, “மீட்கப்பட்ட எலும்புக் கூடு, ஓராண்டுக்கு முன்பு இறந்தவருடையதாக இருக்கலாம். புதர் பகுதி என்பதால், வெளியூர் ஆட்கள் வர வாய்ப்பில்லை. எனவே, உள்ளூரில் மாயமானவர்கள் யாராவது உள்ளார்களா? என்று விசாரணை நடத்தப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை யாரும் மாயமாகவில்லை என்று தெரிகிறது. எலும்புக் கூடு கிடந்த இடத்தின் அருகே சுடுகாடு இருப்பதால், சரியாக புதைக்காத சடலத்தை நரி அல்லது கரடி இழுத்து வந்து இங்கு போட்டிருக்கலாம். எலும்புக் கூடு மட்டும் இருப்பதால், ஆய்வு முடிவுகள் வந்த பின்னர் தான் என்ன நடந்தது என்பது உறுதியாக தெரியும்” என்றனர்.

# சகோதர சகோதரிகள் அனைவருக்கும் எனது சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துகள்

சென்னை : டிச. 4–

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் நேற்று கொண்டாடப்பட்ட நிலையில், பல்வேறு தலைவர்கள் வாழ்த்து தெரிவித்தனர். இந்நிலையில், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தனது X தள பதிவில் கூறியதாவது; மாற்றுத்திறன் கொண்ட சகோதர சகோதரிகள் அனைவருக்கும் எனது சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை மேலும் அர்த்தமுள்ளதாக்கிடும் விதமாக, ரூ.1500 என்றிருந்த மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித்தொகையை ரூ.2000 என உயர்த்தி வழங்க நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

2021-ல் கழக அரசு அமைந்த பிறகு, 2 ஆவது முறையாக மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித்தொகை உயர்த்தப்பட்டிருப்பது, மாற்றுத்திறனாளிகளின் ஏற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் நம் திராவிட மாடல் அரசு என்றும் துணை நிற்கும் என்பதற்கான சான்றாகும். மாற்றத்திறனாளிகளின் தன்னம்பிக்கைப் பயணமும் லட்சியமும் வெல்லட்டும் என்று பதிவிட்டுள்ளார்.

# தென்காசியில் பாஜக சார்பில் தேர்தல் வெற்றி கொண்டாட்டம்



தென்காசி,டிச.4–

மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், தெலுங்கானா, உள்ளிட்ட மாநிலங்களின் சட்டமன்ற தேர்தல் நடைபெற்று முடிவுகள் வந்த நிலையில் மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், ஆகிய மூன்று மாநிலங்களில் பாரதிய ஜனதா கட்சி முன்னணியில் இருப்பதை கொண்டாடும் விதமாக, தென்காசி பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் அதன் மாவட்டத் தலைவர் ராஜேஷ் ராஜா தலைமையில் தென்காசி காசி விஸ்வநாதர் ஆலயம் முன்பு வெடி வெடித்தும், பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணைத் தலைவர் முத்துக்குமார், மாவட்ட பொதுச் செயலாளர் ராஜ்குமார், உள்ளாட்சி மேம்பாட்டு பிரிவு மாவட்ட செயலாளர் கருப்பசாமி, உள்ளாட்சி மேம்பாட்டு பிரிவு மாவட்டத் தலைவர் சங்கர சுப்பிரமணியன், மத்திய அரசு நலத்திட்ட பிரிவு மாவட்ட துணை தலைவர் விஸ்வநாதன், நகரச் செயலாளர் மந்திர மூர்த்தி, நகரத் தலைவர் லட்சுமண பெருமாள், நகர துணைத் தலைவர்கள் நாராயணன், சேகர், நகர பொதுச்செயலாளர் ராஜ்குமார், கிருஷ்ணன், மாரியப்பன், சந்திரன், ஆனந்தி முருகன், கிருஷ்ணன், நகர பிரச்சார பிரிவுத் தலைவர் ஜோசப், 15வது வார்டு பொறுப்பாளர் சேது உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், உறுப்பினர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# வேம்மங்குடி சுடுகாட்டு சாலையை செப்பணிட்டுத் தருக: சிபிஎம் வலியுறுத்தல்

புதுக்கோட்டை, டிச.4–

புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலம் அருகே வேம்மங்குடி மேற்கு ஊராட்சியில் சுடுகாட்டுக்குச் செல்லும் பழுதடைந்த சாலையை செப்பணிட வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தி உள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவரங்குளம் கிழக்கு ஒன்றியப் பேரவைக்கூட்டம் ஒன்றியக்குழு உறுப்பினர் ராஜா தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது. மாவட்டக்குழு முடிவுகளை விளக்கி மாவட்ட செயற்குழு உறுப்பினர் சு.மதியழகன் பேசினார், நடைபெற்றுள்ள வேலைகள் குறித்து ஒன்றியச் செயலாளர் எஸ். மணிவண்ணன் பேசினார்.

தமிழ்நாடு அரசு மின்சாரத்திற்கு ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் திட்டத்தைக் கைவிட வேண்டும், வேம்மங்குடி மேற்கு ஊராட்சியில் சுடுகாட்டுக்குச் செல்லும் பழுதடைந்த சாலையை செப்பணிட வேண்டும், கீரமங்கலத்திலிருந்து வேம்மங்குடி செல்லும் பழுதடைந்த சாலையை செப்பணிட வேண்டும், மகளிர் உரிமைத் திட்டத்தில் விடுபட்ட தகுதியான பயனாளிகள் அனைவரையும் சேர்க்க வேண்டும், நூறுநாள் வேலைத்திட்டத்தில் வருடத்திற்கு நூறுநாள் வேலையும், நிர்ணயிக்கப்பட்ட கூலியும் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பழங்கால உணவுத் திருவிழா

தென்காசி,டிச.4–

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒன்றிய குழுத் தலைவர் பா. சுப்பம்மாள் தலைமையில், ஒன்றிய குழு துணை தலைவர் ஐவேந்திரன் தினேஷ் முன்னிலையில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முத்துப்பாண்டியன், முருகன் ஆகியோர் தூண்டுதலின் பேரில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் வட்டார அளவிலான ரத்த சோகை இல்லாத கிராமம் குறித்து சிறப்பு பழங்கால சிறுதானிய உணவு திருவிழா போட்டிகள் நடைபெற்றது, இதில் 20-கும் மேற்பட்ட மகளிர் சுய உதவி குழுக்கள் கலந்து கொண்டதில் முதல் பரிசு போக நல்லூர் ஊராட்சி வானவில் மகளிர் சுய உதவி குழுவுக்கும், இரண்டாவது பரிசு நெடுவயல் கோதாவரி மகளிர் சுய உதவிக் குழுவுக்கும், மூன்றாவது பரிசு



இடைகால் ரோஜா மகளிர் சுய உதவிக் குழுவுக்கும் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் மா. செல்லத்துரை, வட்டார ஒருங்கிணைப்பாளர் எஸ். திருமதி, போக நல்லூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் குரு சண்முகப்பிரியா, மற்றும் வாழ்வாதார இயக்க உதவித் திட்ட அலுவலர், வட்டார இயக்க மேலாளர், ஒன்றிய செயலாளர் சுரேஷ், நகரச் செயலாளர் எஸ். அப்பாஸ், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ரா.முருகன், நகர்மன்ற தலைவர் மூப்பன்ஹபீபுர் ரஹ்மான், முகைதீன் கனி, திவான் மைதீன், திரிகூடபுரம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர்மீரான், கருப்பசாமி, முருகையா, நல்லையா, சொக்கம்பட்டி பிள்ளையார் பாண்டியன், முருகேஷ், அப்சரா பாதுஷா, யாசின், இத்தாலியன் பீரப்பா, முருகானந்தம், செய்யது மசூது ஆகியோர் கலந்து கொண்டு பழங்கால உணவு பழக்க வழக்கங்களை எடுத்துக் கூறினர்.

# பச்சை பூமி தலைவர் வேங்கை ஆரோனின் 10 கவிதை நூல்கள் வெளியீட்டு விழா

புதுக்கோட்டை ,டிச.4–

புதுக்கோட்டை வெள்ளி அரங்கில் பச்சை பூமி தலைவர் கவிஞர் வேங்கை ஆரோனின் 10 கவிதை நூல்கள் வெளியீட்டு விழா நடைபெற்றது. விழாவிற்கு பேரருள்திரு அமுதன் அடிகள் தலைமை தாங்கினார்.



வீணைக்கு வெட்கம், எள்ளு வயல் பூக்களே, மணம் கமழும் திருமறைகள் ஆகிய மூன்று நூல்களை அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறை தலைவர், அறிவியல் புல முதன்மையர் முனைவர் ஜெயகாந்தன் வெளியிட, காதல் முதலீடு, நேரம் நம் கையில், ஆலி, வேங்கை ஆரோனின் கவிதைகள் ஆகிய நான்கு நூல்களை தமிழ்ச் செம்மல் தங்கம்மூர்த்தி வெளியிட, இரவின் கதறல், ஒரு புயலின் நாதம், உறைந்த கனவுகள் ஆகிய மூன்று நூல்களை கவிஞர் முத்துநிலவன் வெளியிட, சத்யராம் ராமுக்கண்ணு, ஆசிரியர் பாஸ்கர், கவிஞர் சோலையப்பன், பேராசிரியர் விஸ்வநாதன், கவிஞர் மகாசுந்தர், ஆசிரியர் அமுதன், கவிஞர் பீர்முகமது, முனைவர் புஷ்பலதா, லட்சுமணன், கவிஞர் வெங்கடேசன், ஆகியோர் பெற்றுக் கொண்டனர். கவிச்சுடர் கவிதைப்பித்தன் தனது சிறப்புரையில் கவிஞர் வேங்கை ஆரோன் தமிழ்த் தாய்க்குக் கிடைத்த புதிய வரவு, மிகப் பெரிய கொடை என்றும், மேலும் பல நூல்களை வெளியிட வேண்டும் என்றும் வாழ்த்தினார்.

கவிஞர் தங்கம்மூர்த்தி தனது சிறப்புரையில் 10 நூல்கள் ஒரே நேரத்தில் வெளியிடுவது என்பது கின்னஸ் சாதனைதான் என்று பாராட்டினர். கவிஞர் முத்து நிலவன் மதம் தாண்டி கவிதைகள் மிளிர்வதும் மானுடம் போற்றுவதும் மற்ற மதத்தையும் மதித்துப் போற்றுவதும் பன்முகத்தன்மையின் அடையாளம் என்று வாழ்த்தினர். தட்சிணாமூர்த்தி, சவரிமுத்து, வைர ந.தினகரன், நிலவை பழனியப்பன், ஆர். எம்.வி. கதிரேசன், ஆகியோர் முன்னிலை வகித்துப் பேசினர். வட்டாரக் கல்வி அலுவலர் ஜெயலட்சுமி, கவிஞர் முத்துப்பாண்டியன், முனைவர் மேரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். வரவேற்புரை கவிஞர் ஆண்டனி, நிகழ்ச்சித் தொகுப்பு கவிஞர் கீதா, ஏற்புரை நூலாசிரியர் கவிஞர் வேங்கை ஆரோன் வழங்க பச்சை பூமி அமைப்பினர் மரக்கன்றுகளை இலவசமாக வழங்கி நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்கள்.

# மரக்காணம் அருகே தாழங்காட்டில் தார்பாய் கூரையின் கீழ் இயங்கும் ஊராட்சிப் பள்ளி

விழுப்புரம் : டிச. 4–

மரக்காணம் பேரூராட்சிக்குட்பட்ட தாழங்காடு பகுதியில் 40 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஒன்று இயங்கி வருகிறது.



இந்தப் பள்ளிக் கட்டிடம் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பே முற்றிலும் சிதலமடைந்து விட்டது. இப்பள்ளிக்கு புதிதாக கட்டிடம் கட்டித்தர வேண்டும் என்று இங்குள்ள மக்கள் மரக்காணம் வட்டாட்சியர் அலுவலகம் முதல், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரையில் பலமுறை முறையிட்டு, இது தொடர்பான மனுக்களை அளித்துள்ளனர். ஆனாலும், புதிய கட்டிடம் கட்டப்படவில்லை.

இதற்கிடையே பள்ளியின் மேற்கூரை முற்றிலுமாக பாதிக்கப்பட்டு, தற்போது பாலித்தீன் தார்பாயால் மூடப்பட்டு இயங்கி வருகிறது. மழைக்கால அசாதாரண நிலையில், ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டு விடுமோ என்று கிராம மக்கள் அஞ்சுகின்றனர்.

“இந்த பள்ளிக் கட்டிடம் குறித்து மனுக்கள் அளித்துள்ள நிலையில், பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் பலமுறை இப்பள்ளியை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்துள்ளனர்.

ஒவ்வொரு முறை ஆய்வின் போதும், ‘உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்’ என்று கூறி விட்டு செல்வார்கள். ஆனால் எந்த ஒரு நடவடிக்கையும் இருக்காது” என்று தாழாங்காடு கிராம மக்கள் ஆதங்கத்துடன் தெரிவிக்கின்றனர். கடந்த சில வாரங்களாக பெய்து வரும் மழையால் பள்ளிக் கட்டிடம் மேலும் மோசமாகியுள்ளது. இதற்கு மத்தியில் மாணவர்கள் இக்கட்டிடத்தில் கல்வி பயின்று வருகின்றனர்.

பள்ளிக் கட்டிடம் மோசமாக உள்ள சூழலில், இந்தப் பள்ளிக்கு தங்கள் குழந்தைகளை அனுப்பவே பெற்றோர் அஞ்சுகின்றனர். தற்போது இங்கு 40 மாணவர்கள் மட்டுமே படித்து வருகின்றனர். தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள பாலித்தீன் தார்பாய் மேற்கூரை, பலத்த காற்று வீசினால் பறந்து விடக்கூடும் என்ற நிலையிலேயே உள்ளது. தற்போது மரக்காணம் பகுதியில புயல் மழைக்கு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. ‘புயல் மழை வந்தால் இந்த தார்பாய் கூரை தாக்கு பிடிக்க வேண்டுமே’ என்று இங்குள்ள ஆசிரியர்களும் சொற்ப எண்ணிக்கையில் உள்ள மாணவர்களின் பெற்றோரும் அச்சத்தில் உள்ளனர்.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# சொந்த மண்ணில் முதன் முறையாக நியூஸிலாந்தை டெஸ்ட் போட்டியில் வீழ்த்தி வங்கதேசம் சாதனை



**சில்ஹெட் : டிச. 4,**

**சொந்த மண்ணில் முதன் முறையாக நியூஸிலாந்து அணியை டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் வீழ்த்தி சாதனை படைத்தது வங்கதேச அணி.**

நியூஸிலாந்து அணி வங்கதேசத்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையிலான 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டி சில்ஹெட் நகரில் நடைபெற்று வந்தது. இதன் முதல் இன்னிங்ஸில் வங்கதேச அணி 310 ரன்களும், நியூஸிலாந்து அணி 317 ரன்களும் எடுத்தன.

7 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2-வது இன்னிங்ஸை விளையாடிய வங்கதேசம் அணி 100.4 ஓவர்களில் 338 ரன்கள் குவித்து அனைத்து விக்கெட்களையும் இழந்தது. அதிகபட்சமாக கேப்டன் நஜ்முல் ஹொசைன் ஷான்டோ 105, முஸ்பிகுர் ரஹிம் 67, மெஹிதி ஹசன் 50 ரன்கள் சேர்த்தனர். நியூஸிலாந்து அணி சார்பில் அஜாஸ் படேல் 4, இஷ் சோதி 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

332 ரன்கள் இலக்குடன் பேட் செய்தநியூஸிலாந்து அணியானது வங்கதேசத்தின் சுழற்பந்து வீச்சில் ஆட்டம் கண்டது. டாம் லேதம் 0, டேவன் கான்வே 22, கேன்வில்லியம்சன் 11, ஹென்றி நிக்கோல்ஸ் 2, டாம் ப்ளண்டல் 6, கிளென் பிலிப்ஸ் 12, கைல் ஜேமிசன் 9 ரன்களில் வெளியேறினர். 4-வது நாள் ஆட்டத்தின் முடிவில் நியூஸிலாந்து அணி 49 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 113 ரன்கள் எடுத்தது.

டேரில் மிட்செல் 44, இஷ் சோதி 7 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். நேற்று கடைசி நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய நியூஸிலாந்து அணி 71.1 ஓவர்களில் 181 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. தனது 9-வது அரை சதத்தை கடந்த டேரில் மிட்செல் 120 பந்துகளில், 7 பவுண்டரிகளுடன் 58 ரன்கள் எடுத்த நிலையில் நயீம் ஹசன் பந்தை ஸ்வீப் ஷாட் விளையாட முயன்ற போது பேக்வேர்டு ஸ்கொயர் திசையில் நின்ற தைஜுல் இஸ்லாமிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

இதன் பின்னர் களமிறங்கிய கேப்டன் டிம் சவுதி 24 பந்துகளில், 2 சிக்ஸர்கள், ஒரு பவுண்டரியுடன் 34 ரன்களும், நிதானமாக விளையாடிய இஷ் சோதி 91 பந்துகளில், 2 பவுண்டரிகளுடன் 22 ரன்களும் சேர்த்த நிலையில் தைஜுல் இஸ்லாம் பந்தில் நடையை கட்ட நியூஸிலாந்து அணியானது 150 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது.

வங்கதேச அணி தரப்பில் தைஜுல் இஸ்லாம் 6 விக்கெட்களை வீழ்த்தினார். நயீம் ஹசன் 2 விக்கெட்களையும் ஷோரிபுல் இஸ்லாம், மெஹிதி ஹசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இரு இன்னிங்ஸையும் சேர்த்து 10 விக்கெட்கள் வீழ்த்திய தைஜுல் இஸ்லாம் ஆட்ட நாயகனாக தேர்வானார். சொந்த மண்ணில் நியூஸிலாந்து அணியை டெஸ்ட் போட்டியில் வங்கதேச அணி வீழ்த்துவது இதுவே முதன்முறையாகும்.

இதற்கு முன்னர் சொந்த மண்ணில் நியூஸிலாந்து அணிக்கு எதிராக 6 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி ஒன்றில்கூட வங்கதேச அணி வெற்றி பெற்றது இல்லை. இதில் 3 ஆட்டங்களில் தோல்வி அடைந்திருந்த வங்கதேச அணி 3 ஆட்டங்களை டிரா செய்திருந்தது. தற்போதைய வெற்றியின் மூலம் 2 ஆட்டங்கள் கொண்டடெஸ்ட் தொடரில் வங்கதேச அணி 1-0 என முன்னிலை வகிக்கிறது. 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி வரும் 6-ம் தேதி மிர்பூரில் தொடங்குகிறது. ஆட்ட நாயகன் விருது பெற்ற வங்கதேச அணி வீரர் தைஜுல் இஸ்லாம்.

# 66-வது தேசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்

## தங்கம் வென்றார் இளவேனில்



**புதுடெல்லி : டிச. 4,**

**66-வது தேசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்பில் டெல்லியில் நடைபெற்றது.**

இதில் மகளிருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் குஜராத்தை சேர்ந்த இளவேனில் வாலறிவன் தங்கப் பதக்கம் வென்றார்.

8 பேர் கொண்ட இறுதிப் போட்டியில் இளவேனில் வாலறிவன் 253.4 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்தார். ஹரியாணாவின் ரமிதா ஜின்டால் 252.5 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கமும், அதே மாநிலத்தைச் சேர்ந்த நான்சி வெண்கலப் பதக்கமும் கைப்பற்றினர்.

# யுடிடி தேசிய ரேங்கிங் டேபிள் டென்னிஸ் மானவ் தாக்குர் சாம்பியன்



**விஜயவாடா : டிச. 4,**

**ஆந்திராவின் விஜயவாடாவில் உள்ள ராமகோட்டையா உள்விளையாட்டு அரங்கத்தில்நடைபெற்றுவந்த யுடிடி தேசிய ரேங்கிங் டேபிள் டென்னிஸ்சாம்பியன்ஷிப்பில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் பெட்ரோலிய விளையாட்டு மேம்பாட்டு வாரியத்தை சேர்ந்த மானவ் தாக்குர் 4-2 என்ற கணக்கில் ஜி.சத்தியனை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார்.**

மகளிர் பிரிவில் ஆர்பிஜ அணியைச் சேர்ந்த ஸ்ரீஜா அகுலா 4-3 என்ற கணக்கில் பெட்ரோலிய விளையாட்டு மேம்பாட்டு வாரியத்தை சேர்ந்த அர்ச்சனாவை வீழ்த்தி பட்டம் வென்றார்.

# மீண்டும் டென்னிஸ் களத்திற்கு திரும்பும் ரபேல் நடால்



**மாட்ரிட் : டிச. 4,**

**நடால் டிசம்பர் 31 முதல் ஜனவரி 7ஆம் தேதி வரை நடைபெறஉள்ளபிரிஸ்பேன் இண்டர்நேஷனல் டென்னிஸ் தொடரில் விளையாட உள்ளார்.**

22 முறைகிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவரான ஸ்பெயினை சேர்ந்த நட்சத்திர டென்னிஸ் வீரர் ரபேல் நடால் ஏறக்குறைய 1 ஆண்டுக்கு பின் மீண்டும் டென்னிஸ் களத்திற்கு திரும்ப உள்ளார்.

காயம் காரணமாக இந்த ஆண்டு நடைபெற்ற எந்த வித டென்னிஸ் தொடரிலும் பங்கேற்காத நிலையில், குணமடைந்த பிறகு மீண்டும் களத்திற்கு திரும்ப உள்ளார். அதன்படி நடால் டிசம்பர் 31 முதல் ஜனவரி 7ஆம் தேதி வரை நடைபெற உள்ள பிரிஸ்பேன் இண்டர்நேஷனல் டென்னிஸ் தொடரில் விளையாட உள்ளார்.

# ராயுடுவின் இடத்திற்கு இந்த இந்திய வீரரை வாங்க சிஎஸ்கே முனைப்பு காட்டும்

## ரவிச்சந்திரன் அஸ்வின்



**சென்னை : டிச. 4,**

**இந்தியாவில் நடத்தப்படும் உள்ளூர் டி20 தொடரான ஐபிஎல்-ன் 17-வது சீசன் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது.**

இந்தியாவில்நடத்தப்படும் உள்ளூர் டி20 தொடரான ஐபிஎல்-ன் 17-வது சீசன் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. இதையொட்டி விடுவிக்கப்படும் மற்றும் தக்கவைக்கப்படும் வீரர்களின் பட்டியலை அணிநிர்வாகங்கள் சமர்ப்பிக்க ஐ.பி.எல். அமைப்பு கொடுத்திருந்த காலக்கெடு கடந்த மாதம் 26ஆம் தேதியுடன் நிறைவடைந்தது. அதன்படி ஒவ்வொரு அணியும் விடுவிக்கப்படும் மற்றும் தக்கவைக்கப்படும் வீரர்களின் பட்டியலை சமர்பித்தன.

இதனையடுத்து இந்த சீசனுக்கான வீரர்கள் ஏலம் வரும் 19-ந் தேதி துபாயில் நடக்க உள்ளது. இந்த ஏலத்தில் இந்தியா உள்பட பல நாடுகளை சேர்ந்த 1,166 வீரர்கள் தங்களது பெயர்களை பதிவு செய்துள்ளனர். இந்த பட்டியலில் 830 இந்திய வீரர்கள் மற்றும் 336 வெளிநாட்டு வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். இந்நிலையில் சென்னை அணியில் இடம் பெற்றிருந்த முன்னணி வீரரான அம்பத்தி ராயுடு கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்றுவிட்டார். இதனால் அம்பத்திராயுடுவுக்கு பதிலாக அவரது இடத்தை நிரப்ப எந்த வீரரை சென்னை அணிதேர்வு செய்யும்? என ரசிகர்கள் கேள்விஎழுப்பிவருகின்றனர்.

இந்நிலையில்ராயுடுவுக்கு பதில் கருண் நாயரை வாங்க சிஎஸ்கே அணி முனைப்பு காட்டும் என தமிழக கிரிக்கெட் வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் தனது கருத்தை கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, என்னை பொருத்தவரை சிஎஸ்கே அணி ராயுடுவின் இடத்தில் விளையாட கருண் நாயரை ஏலத்தில் வாங்க முனைப்பு காட்டும். ஏனெனில் மிடில் ஆர்டருக்கு ஷாருக்கான் போன்ற அதிரடி வீரர்கள் செட்டாக மாட்டார்கள். எனவே அந்த இடத்தை பூர்த்தி செய்ய சுழற்பந்து வீச்சை நன்றாக எதிர்கொண்டு ஆடும் ஒரு பேட்ஸ்மேன் அவர்களுக்கு தேவை.

அந்த வகையில் பார்க்கையில் கருண் நாயர் சையத் முஸ்டாக் அலி தொடரில் மிகச் சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்தி உள்ளார். அதனால் அவரை மஞ்சள் நிற உடையில் பார்க்க வாய்ப்பு இருக்கிறது. அதோடு சிஎஸ்கே அணி பெரும்பாலான போட்டிகளை சேப்பாக்கம் மைதானத்தில் விளையாடுவதால் சுழற்பந்து வீச்சை சமாளித்து ஆடும் பேட்ஸ்மேன்கள் மீது அதிக ஆர்வம் காட்டும் தோனியும் அதையேதான் விரும்புவார் என்று அவர் கூறினார்.

வரலாறு சினிமா

# 4 பெண்கள்... 4 சூழல்கள்... ஒரு கதை! ‘கண்ணகி’ படம் ட்ரெய்லர்



**சென்னை : டிச. 4,**

**கீர்த்தி பாண்டியன், அம்மு அபிராமி, வித்யா பிரதீப், ஷாலின் நடித்துள்ள ‘கண்ணகி’ படத்தின் ட்ரெய்லர் வெளியாகியுள்ளது.**

அறிமுக இயக்குநர் யஷ்வந்த் கிஷோர் இயக்கத்தில் கீர்த்தி பாண்டியன் நடிப்பில் உருவாகியுள்ள படம் ‘கண்ணகி’. இதில் அம்மு அபிராமி, வித்யா பிரதீப், ஷாலின் ஆகியோர் பிரதான கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ஸ்கைமூன் என்டர்டெய்ன்மென்ட், இஎஸ் என்டர்டெய்ன்மென்ட் ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ள இப்படத்துக்கு மலையாள இசையமைப்பாளர் ஷான் ரஹ்மான் இசையமைத்துள்ளார். வரும் 15-ஆம் தேதி வெளியாக உள்ள இப்படத்தின் ட்ரெய்லரை படக்குழு நேற்று வெளியிட்டுள்ளது.

வெவ்வேறு சூழல்களில் வாழும் நான்கு பெண்களின் கதைகள் தனித்தனியே காட்டப்படுகின்றன. பலமுறை பெண் பார்க்கும் நிகழ்ச்சிகள் நடந்தும் திருமணம் கைக்கூடாமல் இருக்கும் அம்மு அபிராமி, கணவனின் வற்புறுத்தலால் விவாகரத்துக்கு விண்ணப்பித்து நீதிமன்றத்துக்கு அலைந்து கொண்டிருக்கும் வித்யா பிரதீப், திருமண உறவின் மீது நம்பிக்கை இன்றி லிவிங் டுகெதரில் வாழ விரும்பும் ஷாலின், வயிற்றில் இருக்கும் குழந்தையை கருவிலேயே கலைக்க நினைத்து, பின்னர் அது நடக்காமல் போனதால் விரக்தியில் இருக்கும் கீர்த்தி பாண்டியன். இந்த நால்வரை சுற்றித்தான் இப்படம் நகரப் போகிறது என்பதை ட்ரெய்லரில் தெரிந்து கொள்ளமுடிகிறது.

’நான் வேணும்ன்னா அப்படியே வந்து நின்னுடுறேன்ப்பா... ஒரு நாலஞ்சு பேரா வந்து பார்த்துட்டு போக சொல்லுங்கப்பா’ என்று அம்மு அபிராமி பேசும் வசனம் மனதை கனக்கச் செய்கிறது. ராம்ஜியின் ஒளிப்பதிவில் அடர்த்தியான காட்சிகளும், ஷான் ரஹ்மானின் பின்னணி இசையும் படத்தின் தீவிரத்தன்மையை கடத்துகின்றன. நான்கும் தனித்தனி கதைகள் என்றாலுமே நான்கும் திருமணம் என்ற ஒற்றைப் புள்ளியிலேயே சூழல்வதாக தெரிகிறது.

# கவர்ச்சியில் களமிறங்கிய கயல் ஆனந்தி



**சென்னை : டிச. 4,**

**கயல் படத்தில் நடிகை ஆனந்தியின் நடிப்பு பெரியளவில் பேசப்பட்டது.**

பிரபு சாலமன் இயக்கிய கயல் படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமானவர், ஆனந்தி. அந்த படத்தில் அவரது நடிப்பு பெரியளவில் பேசப்பட்டது. ‘சண்டிவீரன்’, ‘திரிஷா இல்லைனா நயன்தாரா’, ‘விசாரணை’, ‘எனக்கு இன்னொரு பேரு இருக்கு’, ‘ரூபாய்’, ‘மன்னர் வகையறா’, ராவண கோட்டம் உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார்.

கடந்த 2021-ம் ஆண்டில் சாக்ரடீஸ் என்பவரை திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு ஒரு குழந்தையும் இருக்கிறது. இந்தநிலையில் கயல் ஆனந்தி தனது கவர்ச்சி படங்களை சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இதுவரை குடும்ப பாங்கான கதாபாத்திரத்தில் மட்டுமே நடித்துவந்த அவர், தற்போது வெளியிட்டுள்ள கவர்ச்சி படங்கள் வைரலாக பரவி வருகின்றன. இதன்மூலம் கவர்ச்சியாக நடிக்கவும் தான் தயார் என்பதை கயல் ஆனந்தி சொல்லாமல் சொல்லியிருக்கிறார் என்று திரையுலகினர் கூறுகின்றனர்.

# நாளைய தீர்ப்பு முதல் லியோ – தொடக்ககால அவமானங்களை கடந்து 31 ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவு செய்த விஜய்



**சென்னை : டிச. 4,**

**சினிமாவில் வெற்றி பெறுவது என்பது அவ்வளவு எளிதல்ல.. அதற்கு கடின உழைப்பும்.. விடாமுயற்சியும் தேவை.. தன் விடாமுயற்சியாலும், கடின உழைப்பாலும் தமிழ் சினிமாவில் 31 ஆண்டுகளாக கோலோச்சி வருகிறார் நடிகர் விஜய்.**

தமிழ் சினிமாவில் விஜய் அடைந்துள்ள வெற்றி என்பது சாதாரணமானதல்ல, 1984’ல் வெளிவந்த வெற்றியில் தொடங்கி இன்று தமிழ் சினிமாவின் சூப்பர் ஸ்டார் (இப்போதைக்கு தளபதிதான், அவரே சொன்னதுபோல்) என்று சொல்லும் அளவிற்கு உச்சத்தை தொட்டு நிற்கிறார் விஜய். 1984’ல் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான இவர், 6 படங்களுக்கு பிறகு 1992’ல் ‘நாளைய தீர்ப்பு’ திரைப்படத்தின் மூலம் நாயகனாக அவதாரம் எடுத்தார். தனது மகனின் தீராத சினிமா பசிக்கு தீணி போடத்தொடங்கியவர் அவரதுதந்தை எஸ்.ஏ.சிதான்.

31 ஆண்டுகளுக்குப் பிறகு தனதுமகனின் வளர்ச்சி இப்படிப்பட்டதாக இருக்கும் என்று நாளைய தீர்ப்பை இயக்கிய எஸ்.ஏ.சந்திரசேகர் கூட நினைத்திருக்கமாட்டார். அந்த அளவிற்கு விஜய்யின் வளர்ச்சி ஒவ்வொருவரையும் மலைக்கவைத்துள்ளது. இந்த வெற்றிக்கு பின்னால் விஜய் சந்தித்த அவமானங்கள் கொஞ்சநஞ்சமல்லை 500, 600 கோடி வசூல் சாதனை என தமிழ் சினிமாவை இன்று உலகமே திரும்பி பார்க்கிறது என்றால் அதற்கு பின்னால் விஜயின் படங்களுக்கு முக்கிய பங்கு உள்ளது. சமீபத்தில் வெளியான அவரது லியோ படம் 620 கோடிக்கும் மேல் வசூல் செய்ததாக சிலாகித்து வருகிறது ரசிகர் படை.

சினிமாவில் மட்டுமல்லாமல் தம்மால் முடிந்த உதவிகளை விஜய் மக்கள் இயக்கம் மூலமாக செய்து வருகிறார். குறிப்பாக கொரோனா காரணமாக திரையரங்குகள் மூடப்பட்ட நிலையில் திரையரங்குகளை நோக்கி ரசிகர்கள் வருவார்களா என்ற எதிர்பார்ப்பை உடைத்து மிகப்பெரிய வசூல் சாதனை படைத்தது விஜயின் மாஸ்டர் திரைப்படம். இப்படி தமிழ் சினிமா மட்டுமல்லாமல் தெலுங்கு மலையாளம் என தொடர்ந்து வெளிநாடுகளிலும் சாதனை படைத்து உச்சத்தை தொட்டு வருகிறது விஜயின் திரைப்படங்கள்.

நடிகர் விஜய் திரைத்துறையில் நாயகனாக கால் பதித்து காதல், ஆக்ஷன், நகைச்சுவை, சென்டிமென்ட் என கிடைக்கும் கேப்பில் எல்லாம் ஸ்கோர் செய்து குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் ரசிக்க வைத்து வருகிறார். சினிமாவில் வெற்றிகரமாக 31 ஆண்டுகளை கடந்துள்ள விஜய்யின் பயணம் மேலும் வெற்றிபெற வாழ்த்துவோம்.

நாளைய தீர்ப்பு படம் மூலம் விஜய் நடிகராக அறிமுகம் ஆகி இருந்தாலும் அவரை ஒரு நடிகராக பெரிய அளவில் அங்கீகரித்த திரைப்படம் 1996 ஆம் ஆண்டு வெளியான பூவே உனக்காக. விக்ரமன் இயக்கத்தில் உருவான இந்தப் படத்தின் மூலம் விஜய்க்கு பெரிய அளவில் மக்கள் மத்தியில் ரீச் கிடைத்தது. அதேவரிசையில் அதே பாணியில் காதலுக்கு முக்கியத்துவம் கொடுத்து 1997ல் வெளியான காதலுக்கு மரியாதையும், 1999ல் வெளியான துள்ளாத மனமும் துள்ளும் திரைப்படமும் விஜய்யின் மார்க்கெட்டை பெரிய அளவில் உயர்த்தியது.

குஷி, பிரண்ட்ஸ் என பல வெற்றிப்படங்கள் இருந்தாலும் லவ் பாய் ஆக இருந்த விஜய்யை அடுத்த கட்டத்திற்கு கொண்டு சென்றது திருமலை திரைப்படம். 2003ம் ஆண்டில் வெளியான திருமலை படம் தான் விஜய்யை ஆக்ஷன் ஹீரோ ஆக உயர்த்தியது. அதற்கு அடுத்து 2004ல் வெளியான கில்லி படமும், 2007ல் வெளியான போக்கிரி படமும் விஜய்யை அக்மார்க் ஆக்ஷன் ஹீரோவாக மாற்றியது. இடையில் பல வெற்றிப்படங்களை கொடுத்திருந்தார் விஜய்.

துப்பாக்கியில் ஆரம்பித்த புதிய பயணம், வசூல் ரீதியாக விஜய்யை புதிய உச்சத்திற்கு கொண்டு சென்றது. துப்பாக்கியை தொடர்ந்து கத்தி, மெர்சல், தெறி என பல வெற்றிப்படங்களை கொடுத்துக் கொண்டே இருந்தார் விஜய். திரைப்படங்களின் உருவாக்கம் சுமாராக இருந்தாலும் விஜய்க்காகவே அந்தப் படங்கள் வசூல் வேட்டை நடத்தியது. கடைசியாக வெளியான லியோ வரை அவரை ஒரு சூப்பர் ஸ்டார் அந்தஸ்திற்கு கொண்டு சென்றுள்ளது.

# திரைப்படமாகிறது பெருமாள் முருகனின் ‘பூக்குழி’



**சென்னை : டிச. 4,**


**எழுத்தாளர் பெருமாள் முருகனின் ‘பூக்குழி’ நாவல் திரைப்படமாக உருவாகிறது.**

‘சேத்துமான்’ படத்தை இயக்கிய தமிழ், இதை இயக்குகிறார். தர்ஷன் கதாநாயகனாக நடிக்கிறார். தர்ஷனா ராஜேந்திரன் நாயகியாக நடிக்கிறார். எஸ். வினோத் குமார் தயாரிக்கும் இந்தப் படத்துக்கு தீபக் ஒளிப்பதிவு செய்கிறார். பிந்து மாலினி, வேதாந்த் பரத்வாஜ் இசை அமைக்கின்றனர். பிரபல நாவலாசிரியர் பெருமாள் முருகன் வசனம் எழுதுகிறார். இதன் படப்பிடிப்பு பெங்களூருவில் தொடங்கியது.

படம் பற்றி இயக்குநர் தமிழ் கூறும்போது, “பெருமாள் முருகனின் இந்த நாவல் என்னைப் பாதித்ததால் படமாக்க முடிவு செய்தேன். நாவலில் இருந்து சினிமாவுக்காக சில விஷயங்களை, எழுத்தாளர் பெருமாள் முருகனின் சம்மதத்தோடு மாற்றியிருக்கிறேன். இதில் சாதிய அரசியலும் இருக்கும். தர்மபுரி பின்னணியில் நடக்கும் கதை இது.

கதாநாயகிக்கு முக்கியத்துவம் இருப்பதால், நன்றாக நடிக்கத் தெரிந்த நாயகி தேவைப்பட்டார். அதனால் தர்ஷனா ராஜேந்திரனை ஒப்பந்தம் செய்தோம். கதை, அவர் பார்வையில் இருந்துதான் நகரும். கதாநாயகன் பக்கத்து வீட்டு பையனை போன்ற தோற்றம் கொண்டவராக வேண்டும் என்பதால் தர்ஷனை நடிக்க வைத்திருக்கிறோம். சமகாலத்தில் நடக்கும் கதையாக படம் உருவாகி வருகிறது” என்றார்.

# விஷால் – ஹரி கூட்டணியில் ரத்னம்




**சென்னை : டிச. 4,**

**விஷால் ஹரி கூட்டணியில் உருவாகும் புதிய திரைப்படத்திற்கான படப்பிடிப்பு தொடங்கியுள்ளது.**

இவர்கள் கூட்டணியில் ஏற்கனவே தாமிரபரணி, பூஜை ஆகிய திரைப்படங்கள் வெளியாகி வசூல் ரீதியில் வெற்றி அடைந்திருக்கின்றன. இந்த நிலையில் மூன்றாவது முறையாக இருவரும் கூட்டணி அமைக்கிறார்கள். இந்த படத்தின் தலைப்பு, டீசர் வெளியானது. படத்துக்கு ‘ரத்னம்’ என தலைப்பு வைத்துள்ளனர். இந்த படத்துக்கு தேவிஸ்ரீ பிரசாத் இசையமைக்கிறார். பிரியா பவானி சங்கர் ஹீரோயினாக நடிக்கிறார். அடுத்த ஆண்டு கோடை விடுமுறையில் இப்படம் ரிலீசாக உள்ளதாக அறிவித்துள்ளனர்.



வரலாறு உலகம்

# இஸ்ரேல் விலகல் – கத்தார் சமரச பேச்சில் பின்னடைவு




**கத்தார் : டிச. 4,**

**கடந்த அக்டோபர் 7 அன்று தொடங்கிய இஸ்ரேல்-ஹமாஸ் போரில் இடைநிறுத்தம் ஏற்பட அரபு நாடான கத்தார் அரசு முயன்று வருகிறது. இதை தொடர்ந்து சமரச பேச்சு வார்த்தைக்காக இஸ்ரேல் நாட்டின் உளவு அமைப்பான மொஸாட் அதிகாரிகள் கத்தார் சென்றிருந்தனர்.**

இதையடுத்துஒருவாரபோர் இடைநிறுத்தத்திற்கு இஸ்ரேல் சம்மதித்தது. இஸ்ரேல் வசம் உள்ள பாலஸ்தீன பயங்கரவாதிகளையும், ஹமாஸ் அமைப்பினரிடம் உள்ள இஸ்ரேலிய பணய கைதிகளையும்பரஸ்பரம்இரு தரப்பினரும் விடுவித்தனர்.

ஆனால்,இஸ்ரேலிலிருந்து அக்டோபர் 7 அன்று கொண்டு செல்லப்பட்ட பணயகைதிகள் அனைவரும் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. ஹமாஸ் அமைப்பினர் பலவந்தமாககொண்டுசென்ற இஸ்ரேலியபணயகைதிகளை விடுவிக்க வேண்டும் எனும் கோரிக்கையில் இஸ்ரேல் பின்வாங்கமறுத்தது.பெண்கள் மற்றும் குழந்தைகளை ஹமாஸ் விடுவிக்க முதலில் ஒப்பு கொண்டு பிறகு பின்வாங்கிவிட்டதாகஇஸ்ரேல் குற்றம் சாட்டியது. இதனால் இந்தபோர் இடைநிறுத்தத்தை கடந்தவெள்ளியன்றுஇஸ்ரேல் முடிவுக்கு கொண்டு வந்தது.

இதை தொடர்ந்து, இஸ்ரேல்மீண்டும்தாக்குதலை தொடங்கி உள்ளது. மீண்டும் தொடங்கிய போரில் 24 மணி நேரத்தில் காசா பகுதியில் ஹமாஸ் அமைப்பினரையும் இஸ்லாமிய ஜிஹாத் எனும் அமைப்பினரையும் குறி வைத்து 400க்கும் மேற்பட்ட இடங்களில் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேலிய ராணுவ படை அறிவித்தது.

ஆண்களை விடுவிக்க வேறுவிதமான நிபந்தனைகளை ஹமாஸ் முன்வைத்ததாகவும், ஆனால் பெண்கள் மற்றும் குழந்தைகளை விடுவிக்காத வரை எந்தவித பேச்சு வார்த்தைக்கும் ஒப்பு கொள்ள முடியாது என இஸ்ரேல் திட்டவட்டமாக தெரிவித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கத்தார் முன்னெடுத்த போர் இடைநிறுத்த முயற்சிகள் தோல்வியடைந்ததால், அங்கு பேச்சுவார்த்தைக்காக சென்றிருந்த இஸ்ரேல் நாட்டின் மொஸாட் உளவு அமைப்பினரை இஸ்ரேல் திரும்ப அழைத்து கொண்டு விட்டது.

இந்நிலையில் போர் மீண்டும் தீவிரமடைவதை தடுக்க கத்தாருடன் அமெரிக்கா இணைந்து பணியாற்றி வருகிறது. "ஏதேனும் உறுதியான வழிகளில் மீண்டும் போர் இடைநிறுத்தம் நடைபெற நாங்கள்முயன்றுவருகிறோம். காசாபகுதியில்மனிதாபிமான உதவிகள் தொடர்ந்து கிடைக்கவும், ஹமாஸ் வசம் உள்ள பணய கைதிகள் அனைவரும் பத்திரமாக மீட்கப்படவும், அதே சமயம் அப்பாவி பாலஸ்தீனர்கள் உயிரிழப்பதைதடுக்கவும்ஒரு வழிமுறையை ஆலோசித்து வருகிறோம்." என அமெரிக்காவின்நிலைகுறித்து அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் இது குறித்து கருத்து தெரிவித்தார். போர் மீண்டும்தொடங்கியுள்ளதால், இனி நீண்ட நாட்களுக்கு தொடரலாம் என்றும் உயிரிழப்புகள் இன்னமும் அதிகரிக்கலாம் என்றும் அரசியல்விமர்சகர்கள்கருத்து தெரிவிக்கின்றனர்.

# வெளிநாடுகளில் வசிக்கும் ஹமாஸ் தலைவர்களை கொல்ல இஸ்ரேல் திட்டம்



**புதுடெல்லி : டிச. 4,**

**பாலஸ்தீனத்தின் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு எதிரான போர் முடிந்த பிறகு, இஸ்ரேல் முன்னாள் பிரதமர் கோல்டா மீரின் வழியைப் பின்பற்ற இப்போதைய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு விரும்புவதாகக் கூறப்படுகிறது.**

இதன்படி, இஸ்ரேல் எதிரிகள் (ஹமாஸ் தலைவர்கள்) எந்த நாட்டில், எந்த கண்டத்தில் இருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து கொலை செய்ய 'ஆபரேஷன் ராத் ஆப் காட்' போன்ற திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கவும் திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது. குறிப்பாக துருக்கி, லெபனான் மற்றும் கத்தாரில் உள்ள ஹமாஸ் தலைவர்களை ஒழிப்பதற்கான திட்டத்தை இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட் வகுத்து வருவதாகக் கூறப்படுகிறது. ஆனால், இந்த திட்டம் மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்று மொசாட் அமைப்பின் முன்னாள் இயக்குநர் இப்ரெய்ம் ஹலெவி கவலை தெரிவித்துள்ளார்.

மொசாட் உளவு அமைப்பு தயாரித்துள்ள பட்டியலில், இஸ்மாயில்ஹனியே,முகம்மது டெய்பி, யாயா சின்வார் மற்றும் காலித் மஷால் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. இதில் இஸ்மாயில் ஹனியே (60) பாலஸ்தீன முன்னாள் பிரதமர் (2006) ஆவார். இவர் ஹமாஸ் பொலிட் பீரோதலைவராக 2017-ல் தேர்வானார். இப்போது தாமாக முன்வந்து வெளிநாடுகளில் (கத்தார், துருக்கி) வசிக்கிறார்.

முகம்மது டெய்ப் என்பவர் ஹமாஸ் ராணுவ பிரிவு தலைவர். இவர்தான் இஸ்ரேலின் முதல் எதிரி. இவரை கொலை செய்ய இஸ்ரேல் 6 முறை முயற்சி செய்துள்ளது. இவர் அமெரிக்காவின் சர்வதேச தீவிரவாதிகள் பட்டியலிலும் இடம்பெற்றுள்ளார். இவர் எங்கு இருக்கிறார் என்பது தெரியவில்லை. யாயா சின்வார் (61) இஸ்டைன் அல்-காசம் பிரிகேட்ஸ் (ஹமாஸ் ராணுவம்) முன்னாள் கமாண்டர் ஆவார். இவர் 2017-ல் காசாவில் உள்ள ஹமாஸ் அமைப்பின் தலைவராக தேர்வானார். 23 ஆண்டுகள் இஸ்ரேல் சிறையில் இருந்த இவர், கைதிகள் பரிமாற்ற திட்டத்தின் கீழ் 2011-ல் வெளியில் வந்தார்.

காலித் மஷால் என்பவர் ஹமாஸ் அமைப்பின் பொலிட்பீரோ உறுப்பினர் ஆவார். இவர் இப்போது கத்தாரில் வசிப்பதாகக் கூறப்படுகிறது. கடந்த 1997-ல் ஜோர்டானில் இருந்த இவரை கொலை செய்ய மொசாட் முகவர்கள் கனடா சுற்றுலாப் பயணிகள் போர்வையில் முயற்சி செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இன அழிப்பை நடத்தும் இஸ்ரேல் அதற்கு பதில் சொல்லியே ஆக வேண்டும்



**துருக்கி : டிச. 4,**

**இஸ்ரேல், காசாவில் இன அழிப்பை நடத்தி வருவதாகவும், இதற்கு சர்வதேச நீதிமன்றத்தில் இஸ்ரேல் பதில் சொல்லியே ஆக வேண்டும் எனவும் துருக்கி அதிபர் தயீப் எர்டோகன் காட்டத்துடன் தெரிவித்துள்ளார்.**

ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக காசாவில் இஸ்ரேல் ராணுவம் நடத்தி வரும் போர், 2 மாதங்களை நெருங்க உள்ளது. இதன் காரணமாக 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காசா பகுதியில் இதுவரை உயிரிழந்துள்ளனர். இதில் 5,000க்கும் மேற்பட்டோர் குழந்தைகள் என்பது உலக நாடுகள் இடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இஸ்ரேலை கண்டிக்கும் வகையில் பல்வேறு நாடுகளும் தீர்மானங்களை நிறைவேற்றுவதோடு சர்வதேச அளவில் பல்வேறு அழுத்தங்களையும் கொடுத்து வருகிறது.

இந்த நிலையில் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்த துருக்கி அதிபர் தயீப் எர்டோகன், இஸ்ரேல் மீது சர்வதேசநீதிமன்றத்தில்வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதாகவும், உரிய தண்டனை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். இஸ்ரேல் அதிபர் நெதன்யாகுவின் செயல், அவரது அரசுக்கு மட்டுமின்றி அவரை ஆதரிக்கும் நாடுகளுக்கும்கரும்புள்ளியாக மாறி இருப்பதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். அவர்களின் இந்த மௌனத்திற்கு வரும் காலங்களில்பதில்சொல்லியே ஆக வேண்டும் எனவும் அவர் காட்டத்துடன்தெரிவித்துள்ளார்.

சுமார் 2,000க்கும் மேற்பட்ட துருக்கி வழக்கறிஞர்கள் சர்வதேச நீதிமன்றத்தில் இஸ்ரேலுக்கு எதிராக வழக்கு தொடுத்து இருப்பதாகவும், காசா பகுதியில் இன அழிப்பை மேற்கொண்டுவரும்இஸ்ரேல் அரசுக்கு உரிய தண்டனை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் கருத்து தெரிவித்து வரும் நிலையில், துவக்கம் முதலே துருக்கி அதிபர் இஸ்ரேலுக்கு எதிராக கருத்து தெரிவித்து வந்தார். இந்நிலையில் இஸ்ரேலுக்கு எதிராக தற்போது துருக்கியை சேர்ந்த வழக்கறிஞர்கள் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா. சபை பருவநிலை மாநாட்டில் மேடைக்கு அழைக்கப்பட்ட ஒரே தலைவர்

## பிரதமர் நரேந்திர மோடி




**துபாய் : டிச. 4,**

**ஐ.நா. சபை பருவநிலை மாநாட்டில் மேடைக்கு அழைக்கப்பட்டு பிரதான இருக்கையில் அமர வைக்கப்பட்ட ஒரே தலைவர் என்ற பெருமையை இந்திய பிரதமர் நரேந்திர மோடி பெற்றுள்ளார்.**

ஐ.நா. சபையின் 28-வது பருவநிலை மாறுபாடு மாநாடு ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாய் நகரில் கடந்த 30-ம் தேதி தொடங்கியது. கடந்த 1-ம் தேதி நடைபெற்ற 2-வது நாள் மாநாட்டில் பிரதமர் மோடி உட்பட பல நாட்டு தலைவர்கள் பங்கேற்றனர்.

அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ், பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சுனக், பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மெக்ரான், ஜெர்மனி பிரதமர் ஒலாஃப் ஷோல்ஸ், இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி, ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடோ, பாகிஸ்தான் பொறுப்பு பிரதமர் அன்வர் அல்-ஹக்ககார் உட்பட சுமார் 100-க்கும் மேற்பட்ட உலக தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்று உள்ளனர்.

இந்த சூழலில் கடந்த 1-ம் தேதி நடைபெற்ற விழாவின்போது, மாநாட்டின் தலைவர் சுல்தான் அல் ஜபீர், ஐ.நா. பருவநிலை மாறுபாடு தடுப்பு செயலாளர் சைமன் உள்ளிட்ட முக்கியமான தலைவர்கள் மேடையில் அமர இருக்கைகள் ஒதுக்கப்பட்டன. அப்போது பிரதமர் மோடி மேடைக்கு அழைக்கப்பட்டு பிரதான இடத்தில் அமர வைக்கப்பட்டார். வேறு உலகநாடுகளின் தலைவர்களுக்கு மேடையில் இருக்கை ஒதுக்கப்படவில்லை. சர்வதேச அரங்கில் இந்தியாவின் செல்வாக்கு உயர்ந்து வருவதையே இது காட்டுகிறது என்கின்றனர்.

சர்வதேச அரங்கில் சீனா, ரஷ்யா ஓரம் கட்டப்பட்டு வருகின்றன. இதன்காரணமாக சீன அதிபர் ஜி ஜின்பிங், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் ஐ.நா. பருவநிலை மாநாட்டில் பங்கேற்கவில்லை. தனிப்பட்ட காரணங்களுக்காக அமெரிக்க அதிபர் ஜோ பைடனும் மாநாட்டுக்கு வரவில்லை. இந்த சூழலில் துபாய் மாநாட்டில் பிரதமர் மோடி அனைத்து தலைவர்களையும் ஒன்றிணைக்கும் மையப்புள்ளியாக செயல்பட்டார். பல்வேறு நாடுகளின் தலைவர்கள் அவரை தனியாக சந்தித்துப் பேசினர். அவர்களில் இத்தாலி பிரதமர் மெலோனி பிரதமர் மோடியுடன் நீண்ட நேரம் ஆலோசனை நடத்தினார். அவரோடு இணைந்து செல்பிபுகைப்படம் எடுத்து சமூக வலைதளத்தில் வெளியிட்டார். அதில், தனது பெயரையும் (மெலோனி), மோடி பெயரையும் இணைந்து 'மெலோடி' என்று பதிவிட்டுள்ளார். இந்த 'மெலோடி' புகைப்படம் சர்வதேச அளவில் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. மெலோனியின் செல்பி புகைப்படத்துக்கு பிரதமர் மோடி சமூக வலைதளத்தில் அளித்துள்ள பதிலில், "நண்பர்களை சந்திப்பது எப்போதுமே மகிழ்ச்சி" என கூறியுள்ளார்.

கடந்த ஆண்டு அக்டோபரில் இத்தாலியின் முதல் பெண் பிரதமராக ஜார்ஜியா மெலோனி பதவியேற்றார். அவர் பொறுப்பேற்ற பிறகு சீனாவின் கனவு திட்டமான பெல்ட் அண்ட் ரோடு திட்டத்தில் இருந்து இத்தாலி வெளியேறியது. தற்போது இந்தியாவுடன் இத்தாலி அதிக நெருக்கம் காட்டி வருகிறது. இரு நாடுகளின் தலைவர்களும் சர்வதேச அரங்கில் நல்ல நண்பர்களாக வலம் வருகின்றனர்.

# பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் ஓடும் பேருந்து மீது தீவிரவாதிகள் துப்பாக்கிச்சூடு : 8 பேர் பலியான சோகம்




**பாகிஸ்தான் : டிச. 4,**

**பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் ஓடும் பேருந்து மீது தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 8 பேர் உயிரிழந்தனர், 26 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.**

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் ஜில்ஜித் பல்டிஸ்டான் பகுதியில் சுமார் 50க்கும் மேற்படோருடன் பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது. பாகிஸ்தானின் பெஷாவர் மற்றும் சிலாஸ் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்தவர்கள் இந்த பேருந்தில் பயணித்தனர். நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு சில்லாஸ் பகுதி அருகே பேருந்து வந்து கொண்டிருந்த போது, தீவிரவாதிகள் திடீரென பேருந்து மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இதனால் ஓட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து, எதிரில் வந்த லாரி மீது மோதி விபத்திற்குள்ளானது. இந்த துப்பாக்கிச் சூடு மற்றும் விபத்தில் சிக்கி 8 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இதில் இருவர் இந்திய ராணுவத்தை சேர்ந்தவர்கள் ஆவர். மேலும் 26 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டதில், அவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பேருந்து, விபத்தில் சிக்கியதை தொடர்ந்து அங்கிருந்து தீவிரவாதிகள் தப்பி ஓடி உள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக தற்போது போலீஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் தீவிரவாதிகளை பிடிப்பதற்கான தேடுதல் வேட்டையும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை இந்த சம்பவத்திற்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. கடந்த 2013 ஆம் ஆண்டு, இப்பகுதியில் மலைஏற்றத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில், 9 வெளிநாட்டவர் படுகொலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# 191–வது பிறந்தநாளை கொண்டாடிய ஜோனதன் ஆமை : குவியும் வாழ்த்துகள்



**செயின்ட் ஹெலேனா : டிச. 4,**

**செயின்ட் ஹெலேனா தீவில் வசித்து வரும் ஜோனதன் ஆமை தனது 191வது பிறந்தநாளை கொண்டாடியுள்ள நிலையில், உலகின் மிகவும் வயதான ஆமை என்ற சாதனையை தக்க வைத்துள்ளது.**

உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளிலும் அதிகபட்ச வயது வரை வாழக்கூடியவை ஆமைகள் ஆகும். இவற்றின் சராசரிவாழ்நாள் சுமார் 150 முதல் 200 ஆண்டுகள் வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

கடல் ஆமைகள் உணவாகாமல் தப்பித்தால் இந்த 150 ஆண்டுகளை கடப்பது மிகவும் எளிதானதாகும். அதேசமயம் நிலத்தில் வாழும் ஆமைகளில் செச்சல்ஸ் மற்றும் கெலபாகஸ் ஆமைகள் சுமார் 150 முதல் 200 ஆண்டுகள் வரை வாழக்கூடியவை ஆகும். உலகில் இது போன்று வளர்ப்பு ஆமைகள் ஏராளமாக இருக்கும் நிலையில், செயின்ட் ஹெலேனா தீவில் வசித்து வரும் ஜோனதன் என்ற ஆமை மிகவும் புகழ்வாய்ந்தது ஆகும்.

இந்த ஆமை எப்போது பிறந்தது என்பது தொடர்பான ஆவணங்கள் இல்லை என்றாலும் இந்த ஆமை 1832 ஆம் ஆண்டு பிறந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் கணித்துள்ளனர். கடந்த 1882 ஆம் ஆண்டு செயின்ட் ஹெலேனா தீவின் ஆளுநராக பதவி வகித்த சர் வில்லியம் கிரே வில்சன் என்பவர் மூலமாக ஜோனதன் இந்த தீவிற்கு கொண்டுவரப்பட்டது.

அப்போது முதல் இப்போது வரை ஆளுநர் மாளிகையிலேயே ஜோனதன் வசித்து வருகிறது. ஜோனதன் ஆமையின் பிறந்த தேதி சரிவர தெரியாத நிலையில், ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மூன்றாம் தேதி ஆமையின் பிறந்த தினமாக கருதப்பட்டு கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில் 191 வது பிறந்தநாளை நேற்று ஜோனதன் கொண்டாடியுள்ளது. இதையொட்டி மூன்று நாட்களுக்கு ஜோனதன் ஆமையை பொதுமக்கள் நேரில் சந்திக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆவணங்களின் அடிப்படையில் 191 வயது என கணக்கிடப்பட்டாலும் கூட, இந்த ஆமைக்கு 200 வயதிற்கும் மேல் இருக்கும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். தற்போது நல்ல உடல்நிலையோடு ஜோனதன் ஆமை இருந்து வருவதாகவும், மேலும் சில ஆண்டுகள் நல்ல உடல் நலத்துடன் ஆமை இருக்கும் எனவும் ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இரண்டு நூற்றாண்டுகள் கடந்து மூன்றாவது நூற்றாண்டிலும் ஜோனதன் ஆமை உயிர் வாழ்வதற்கான சாத்திய கூறுகள் இருப்பதாக விலங்கின ஆர்வலர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர். ஏற்கனவே உலகின் மிகவும் வயதான ஆமை என்ற கின்னஸ் சாதனை படைத்துள்ள ஜோனதன் தனது 191-வது பிறந்தநாளில் அந்த சாதனையை தக்க வைத்துக் கொண்டுள்ளது. இதையடுத்து ஜோனதன் ஆமைக்கு பல்வேறு தரப்பினரும் வாழ்த்துக்கள் தெரிவித்து வருகின்றனர்.

## ஜெர்மனியில் கடும் பனிப்பொழிவு

# விமானம், ரெயில் போக்குவரத்து பாதிப்பு விளையாட்டு போட்டிகள் ரத்து



**ஜெர்மனி : டிச. 4,**

**தெற்கு ஜெர்மனியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டது. இதனால் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டது. விமான நிலைங்கள் மூடப்பட்டன. இதனால் விமான போக்குவரத்து தடைப்பட்டது. அத்துடன் ரெயில் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டன.**

பேயர்ன் முனிசி - யூனியன் பெர்லின் ஆகிய அணிகளுக்கு இடையில் நடைபெற இருந்த கால்பந்து போட்டி ரத்து செய்யப்பட்டது. மேலும், பல போட்டிகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. கடும் பனிப்பொழிவால் 760 விமான சேவை பாதிக்கப்பட்டன. ஜெர்மனியின் முக்கிய விமான நிலையங்களில் ஒன்றான முனிச் மூடப்பட்டது. வெள்ளிக்கிழமையில் இருந்து சனிக்கிழமை வரை 40 செ.மீ. அளவிற்கு பனிப்பொழிவு இருந்துள்ளது. பொதுமக்கள் வீட்டிற்குள்ளே இருக்குமாறு அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

பனிப்பொழிவு மற்றும் குறைந்த வெட்பநிலை ஆகியவற்றால் ஜெர்மனியின் பல பகுதிகளில் கடந்த சில நாட்களாக சிரமத்திற்கு உள்ளாகியுள்ளன.

## பிலிப்பைன்ஸ் நாட்டில் பயங்கர நிலநடுக்கம்

# சுனாமி எச்சரிக்கையால் மக்கள் அலறியடித்து ஓட்டம்



**மணிலா : டிச. 4,**

**பிலிப்பைன்ஸ் நாட்டின் மிண்டானாவோ தீவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. மேலும் தென்மேற்கு ஜப்பான் கடற்கரை பகுதியில் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டதால் மக்கள் தங்களது இல்லங்களை விட்டு வெளியேறி சாலைகளில் திரண்டதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.**

பிலிப்பைன்ஸ் நாட்டில் 7.5 ரிக்டரில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. மிண்டானாவ் பகுதிக்கு அருகில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்திய நேரப்படி இரவு 08:07 மணி அளவில் இந்த நிலநடுக்கம் பதிவானது. இதனை EMSC உறுதி செய்துள்ளது. இதன் காரணமாக பிலிப்பைன்ஸ் மற்றும் தென்மேற்கு ஜப்பான் கடற்கரை பகுதியை சுனாமி தாக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் சுனாமி அபாயம் தற்போது கடந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் கடல் கொந்தளிப்புடன் சில இடங்களில் காணப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. சுமார் 63 கிலோ மீட்டர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் பதிவானது. பிலிப்பைன்ஸ் நாட்டில் நிலநடுக்கம் மற்றும் எரிமலை வெடிப்பு சம்பவங்கள் அவ்வப்போது பதிவாகிறது. இந்த நிலநடுக்கம் சுமார் 4 நிமிடங்களுக்கு மேல் உணரப்பட்டதாகவும், சக்தி வாய்ந்தது எனவும் அந்நாட்டு மக்கள் தெரிவித்துள்ளனர்.

நிலநடுக்கத்தை தொடர்ந்து மக்கள் வீடுகளில் இருந்து வெளியேறி, மேடான பகுதிகளுக்கு சென்றதாகவும், பாதிப்பு மற்றும் உயிரிழப்பு குறித்த விவரங்கள் தெரியவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஜாம்பியாவில் சோகம்

## உயிரோடு மண்ணில் புதைந்த சுரங்கத் தொழிலாளர்கள்



**ஜாம்பியா : டிச. 4,**

**ஜாம்பியா நாட்டில் தொடர் மழை காரணமாக, தாமிர சுரங்கத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 7 பேர் உயிரிழந்திருப்பதோடு 20-க்கும் மேற்பட்டோர் மாயமாகியுள்ளனர்.**

ஆப்பிரிக்க நாடான ஜாம்பியாவில் சட்டவிரோதமாக தாமிர சுரங்கங்களுக்குள் தொழிலாளர்கள் நுழைந்து கனிமங்களை எடுத்து வருவது வாடிக்கையான ஒன்றாக இருந்து வருகிறது. ஆபத்தான முறையில் இந்த சுரங்கங்களுக்குள் தொழிலாளர்கள் சென்று வருகின்றனர். இதனிடையே ஜாம்பியா நாட்டில் கடந்த 10 நாட்களுக்கும் மேலாக இடைவிடாமல் கன மழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக சுரங்கம் அமைந்துள்ள சிங்கோலா உள்ளிட்ட பகுதிகளில் பலத்த நிலச்சரிவுகள் ஏற்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக சட்டவிரோதமாக தொழிலாளர்கள் தாமிர சுரங்கத்திற்குள் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, திடீரென நிலச்சரிவு ஏற்பட்டு முகப்பு பகுதி மண்ணில் புதைந்தது.

இதனால் உள்ளே சிக்கிக் கொண்ட தொழிலாளர்கள் வெளியேற முடியாமல் தவித்து வருகின்றனர். எவ்வளவு பேர் சுரங்கத்திற்குள் இருக்கிறார்கள் என்ற தகவல் சரிவர தெரியாத நிலையில், 7 பேர் மண்ணிற்குள் புதைந்து உயிரிழந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

மேலும் 20க்கும் மேற்பட்டோர் சுரங்கத்திற்குள் சிக்கி இருக்கலாம் எனவும் அவர்கள் உயிர்பிழைத்திருக்க வாய்ப்பில்லை எனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பத்திற்கு இரங்கலை தெரிவித்துள்ள அந்நாட்டு அதிபர் ஹகைண்டே ஹிச்சிலெமா, மீட்பு பணியில் ஈடுபட்டுள்ள மீட்பு பணியாளர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார். இதுவரை அங்கிருந்து உடல்கள் எதுவும் மீட்கப்படாத நிலையில், மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.



# மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கரில் பாஜக ஆட்சி: காங்கிரஸ் வசமானது தெலங்கானா

# துபாயில் திருப்பூர் இளம் பெண்களுக்கு பாலியல் தொல்லை: 17 வயது சிறுமி உட்பட 4 பேர் கைது






# மிக்ஜாம் புயல்; 12 அடிக்கு மேல் எழும்பும் அலைகள்: நாகை மீனவர்கள் கவலை

சென்னை / புதுக்கோட்டை | 04.12.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ரமேஷ் சந்திர மஜும்தார் , இந்திய வரலாற்று அறிஞர் (பி.1888) (இ.1980)



நீலகண்ட பிரம்மச்சாரி , இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி.1889) (இ.1978)



ரா. வெங்கட்ராமன் , 6வது இந்தியக் குடியரசுத் தலைவர் (பி.1910) (இ.2009)



ஐ. கே. குஜரால் , 12வது இந்தியப் பிரதமர் (பி.1919) (இ.2012)



## இன்றைய நினைவு நாள்

அ. வேங்கடாசலம் பிள்ளை , தமிழகத் தமிழறிஞர் (பி.1886) (இ.1953)



வி. ஆர். கிருஷ்ணய்யர் , இந்திய நீதிபதி, அரசியல்வாதி (பி.1914) (இ.2014)



## கடற்படையினர் தினம் - (இந்தியா)